பக்கங்கள்: எட்டு

Registred as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50

கடர்: 4 சுக்கில ஞூ வைகாசி மீ 01 உ. ஞாயிற்றுகிழமை ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை 08 (14 - 05 - 1989)

UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-134

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்

கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

தரமான ✶ சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு

கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

A Healthy Mind in A Healthy Body.

# யாழ்ப்பாணம் - கொழும்பு தினசரி விமான சேவை!

## 'அவ்ரோ' பயணத்துக்கு 1,000 ரூபா!

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு தினசரி விமான சேவை ஒன்றை இலங்கை விமானப்படை நடத்தி வருகிறது. இந்த பலாலி - இரத்மலானை விமான சேவையைப் பொது மக்களும் பயன்படுத்திக் கொள்ளலாம் எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

பலாலியிலிருந்து இரத்மலானைக்கு இந்த விமானத்தில் செல்வதற்கு ஒரு வழிப் பயணக் கட்டணம் ஆயிரம் ரூபா என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை விமானப்படையின் அனுசரணையுடன் ''ஹெலி ரூர்ஸ்'' என்ற அமைப்பு இந்தச் சேவையை நடத்தி வருகிறது.

இரத்மலானையிலிருந்து தினசரி காலை ஏழு மணிக்குப் புறப்படும் இந்த ''அவ்ரோ'' விமானம் காலை 8.05 மணிக்கு பலாலியை வந்தடையும்.

பின்னர் காலை 8.45 மணிக்கு பலாலியில் இருந்து புறப்பட்டு காலை 9.50 மணிக்கு இரத்மலானையைப் போய்ச் சேரும்.

பயணிகளை இறக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் இந்த விமானம் வழியில் வவுனியாவில் அல்லது அநுராதபுரத்தில் தரித்துச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பலாலியிலிருந்து வவுனியாவுக்குச் செல்வதற்கு ரூபா 400 பயணக் கட்டணமாக அறவிடப்படும்.

50 பயணிகள் செல்லக்கூடிய

( 8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். கோட்டைக்கு விஜயபாகு 'ரெஜிமன்ட்'!

யாழ்ப்பாணம், மே 14

யாழ். கோட்டைக்கு ஸ்ரீலங்கா விஜயபாகு (ரெஜிமன்ட்) படைப் பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினர் வந்து சேர்ந்துள்ளனர்.

ஏற்கனவே யாழ். கோட்டையில் இருந்த ஸ்ரீலங்கா கஜபாகு படையினர் கட்டம் கட்டமாக தென் பகுதிக்கு மாற்றப்பட்டு வருகின்றனர்.

இதனை அடுத்தே விஜயபாகு படைப்பிரிவினர் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி படைப் பிரிவைச் சேர்ந்த மேலும் பலர் இங்கு வர உள்ளதாகவும் தெரியவருகிறது.

## முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளில் எல்லைப்புற தமிழ்க் கிராமங்களில் சிங்கள மக்கள் குடியேற்றம்

முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் எல்லைப் பகுதிகளான தனிக்கல்லு, எருக்கலம்புலவு ஆகிய தமிழ்க் கிராமங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த சில வாரங்களாக ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்புப்படையினரே இக் குடியேற்ற நடவடிக்கையில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக அறியவருகிறது.

இப்பகுதி தமிழ் மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்படுவதாகவும் கூறப்படுகிறது.

கடந்த மார்ச், ஏப்பிரல் மாதங்களில் அதிகளவு சிங்களமக்கள் இங்கு குடியேற்றப்பட்டுள்ளனர்.

இக்குடியேற்றம் குறித்து ஸ்ரீலங்கா அரசுக்கும் புகாரிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 15 இலங்கையர்கள் ஜேர்மன் பொலீஸாரால் கைது

மேற்கு ஜேர்மன் பொலீஸார் கடந்த ஐந்து வாரங்களில் 15 இலங்கையரை எல்லைப்புறத்தில் வைத்துக் கைது செய்தனர்.

இந்த இலங்கையர் சட்டவிரோதமாக டென்மார்க்குக்குள் பிரவேசிக்க முயன்ற போதே கைது செய்யப்பட்டனர்.

மேற்கு ஜேர்மன் எல்லைப்புற நகரமான பிளென்ஸ்பேர்க்கில் இருந்து டென்மார்க் செல்லும் ரயில்களில் இவர்கள் கள்ளத்தனமாக பயணம் மேற்கொண்டனர்.

ரயிலில் மலசலகூடத்தில் மேலே உள்ள இடைவெளியில் ஒளித்திருந்து பயணம் செய்த போதே இவர்கள் பொலீஸாரிடம் அகப்பட்டனர்.

அந்த இடைவெளி மிகவும் சிறியது அதில் ஏறி அமர்ந்து கொள்ளவும், இறங்கவும் வேறொருவரின் உதவியை நாடவேண்டும். இது மிகவும் அபாயகரமான பயணமாகும் என்று மேற்கு ஜேர்மன் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-எ)

## ● தென்பகுதிக் கொலைகள்!

கொழும்பு, மே 14

அம்பாந்தோட்டை, அங்குணுகொலபெலஸ்ஸ பகுதியில் மூவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சுமதிபால, திலகசிறி, பியபந்து ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

வெள்ளவாய பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நான்கு பேர் தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். கொலையுண்டவர்களில் தந்தையும் இருபுதல்வர்களும் அடங்குகின்றனர்.

அக்குரஸ பகுதியில் சூரியபால என்பவர் வீட்டில் இருந்து வெளியே இழுத்து வரப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

வெலிகம பகுதியில் எம்.ஆர். சிறிபால என்பவரும் சுட்டுக் கொல்லப்பட்டார். [ஒ-எ]

## முச்சந்தி முரளி



விழுந்து விழுந்து விசாவுக்கு விண்ணப்பிச்சவையிலை எத்தினை பேருக்குக் கிடைக்குது எண்டு பாப்போமே......!

## யுனிசெப் குழு மீண்டும்வருகிறது

யாழ்ப்பாணம், மே 14

''யுனிசெப்'' அமைப்பைச் சேர்ந்த சிலர் மீண்டும் யாழ். நகர் வரவுள்ளனர்.

நாளை திங்கட்கிழமை குழுவினர் இங்கு விஜயம் செய்ய உள்ளனர்.

யாழ். நகரில் 'யுனிசெப்' பினுல் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்பார்வை செய்வதற்காகவே இந்தக் குழு இங்கு வருகை தர உள்ளது.

## பலாலி முகாம் சிப்பாய் தற்கொலை

யாழ்ப்பாணம், மே 14

பலாலி இராணுவ முகாமில் உள்ள ஸ்ரீலங்கா சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இச் சம்பவம் நேற்றுக்காலை நடைபெற்றது.

சிப்பாயின் மரணத்துக்கான காரணம் எதுவென தெரியவரவில்லை. பொலீஸ் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-10)

## முடமாவடியில்

யாழ்ப்பாணம், மே 14

நேற்று திருநெல்வேலி முடமாவடி பகுதியில் பிற்பகல் 4.30 மணியளவில் துப்பாக்கி சூட்டுச் சம்பவம் ஒன்றுஇடம் பெற்றது.

செய்தி எழுதப்படும்வரை சேத விவரம் அறியவரவில்லை.

## இராஜலிங்கம் ஏ. எஸ் பி. ஆகிறுர்

யாழ்ப்பாணம், மே 14

யாழ். பொலீஸ் பிரிவு தலைமை அலுவலக இன்ஸ்பெக்டராக கடமையாற்றி வந்த திரு. எஸ். இராஜலிங்கம் நாளை முதல் உதவிப் பொலீஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெறுகிறுர். (ஒ-10)

## பேச்சு நடத்த விருப்பம் என்ற தகவலுக்கு ஜே. வி. பி. மறுப்பு!

கொழும்பு, மே 14

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோகண விஜேவீர நோய்வாய்ப்பட்டிருக்கிறுர் என்பது உண்மை. அவர் சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல வாய்ப்பு ஏற்படுத்தித் தருமாறு கோரியதும் உண்மை. ஆனுல் அதனைப் பகிரங்கப்படுத்திச் செய்யுமாறு நாம் அரசாங்கத்தைக் கோரவில்லை.

- இப்படி ஜே. வி. பி. பிரமுகர் ஒருவர் தமக்கு தொலைபேசிமூலம் தெரிவித்ததாக கொழும்பில் உள்ள பி.பி.சி. செய்தியாளர் திரு. கிறிஸ் நட்டால், உதயன் சிறப்புச் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

''எமது தலைவரை வெளிநாட்டுக்குச் சிகிச்சைக்கு அழைத்துச் செல்லும் ஏற்பாட்டை இரகசியமாகச் செய்யும்படியே நாம் கோரினேம், அதனைப் பகிரங்கமாக நாம் செய்தால் எமது இளைஞர்கள் எம்மைத் தவருய்ப் புரிந்து கொண்டு விடுவார்கள். நாம் அரசுடன் உடன்பாடு கண்டு விட்டதாகத் தெரிவித்து எமக்கு எதிராகத் திரண்டு விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே பகிரங்கமாக இந்த ஏற்பாட்டை நாம் செய்ய விரும்பவில்லை.

-இப்படி அந்தப் பிரமுகர்

[8ஆம் பக்கம் பார்க்க]

## ஆணையாளராக பாலசிங்கம் நியமனம்

அரியாலை, மே 14

யாழ் மாநகரசபையின் புதிய ஆணையாளராக திரு. பொ. பாலசிங்கம் நியமிக்கப்பட்டிருக்கின்றுர்.

இவர் உள்ளூராட்சி சேவையில் நீண்டகால அனுபவம் உடையவர். இவர் முன்னர் காங்கேசன்துறை பிரதேச சபையின் விசேட ஆணையாளராகவும், காங்கேசன்துறை நகரசபைச் செயலாளராகவும் பணிபுரிந்து வந்தார்.

இவர் தமது கடமையை நாளை பொறுப்பேற்பார்எனத் தெரிய வருகின்றது. [ஒ-13]

## கந்தர்மடத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், மே 14

கந்தர்மடம் பகுதியில் நேற்று நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் காரணமாக இரண்டு பொதுமக்கள் காயம் அடைந்தனர்.

நேற்றுக் காலை சுமார் 7-30 மணி அளவில் திடீரென இப் பகுதியில் துப்பாக்கிப் பிர

[8ஆம் பக்கம பார்க்க]

## நெடுங்கேணியில் சனியன்று இடம்பெற்ற மோதல்

நேற்று (சனியன்று) காலை 7 மணியளவில் நெடுங்கேணியில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

மோதலின் போது இந்தியப் படை ஜவான்கள் சிலர் மரணமானதாகவும் ஏழுபேர் வரையில் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது. மரணமானவர்களின் எண்ணிக்கை பன்னிரண்டு (12) என்றும் சொல்லப்பட்டது. எனினும் இச் செய்தியை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

இதனைத் தொடர்ந்துஷெல் அடியும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் தொடர்ச்சியாகக் கேட்டன. அங்கு பதற்றமும் நிலவியது.

இரண்டு ஹெலிகள் அப் பகுதிக்கு வந்து வட்டமிட ஒன்று கீழ்இறங்கி காயப்பட்டவர்களை ஏற்றிச் சென்றதாகத் தெரிகிறது.

இதனைத் தொடர்ந்து நெடுங்கேணி ஊடான முல்லைத்தீவு — வவுனியா போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்தன. (ஒ-164)

[8ஆம் பக்கமும் பார்க்க]

## குடும்பஸ்தர் வெட்டிக் கொலை! துண்டிக்கப்பட்ட தலைமுற்றத்தில்;

கொழும்பு, மே 14

தெவிநுவரையில் கடத்தப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக்கொல்லப்பட்டார்.

துண்டிக்கப்பட்ட தலை அவரது வீட்டு முற்றத்தில் வைக்கப்பட்டிருந்தது.

கடந்த வியாழக்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது.

உயிரிழந்த நந்தசேன (வயது 42) என்ற இந்தநபர் மனைவி, பிள்ளைகளுடன் வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் ஆயுதம் தரித்த இளைஞர்களினுல் கடத்திச் செல்லப்பட்டார். (ஒ-எ)

## பிரிட்டிஷ் தூதுக்குழு கொழும்பு திரும்பியது

யாழ்ப்பாணம். மே 14

வடபகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரிட்டிஷ் தூதுக்குழு நேற்று முன்தினம் கொழும்பு திரும்பியது.

வடபகுதியின் பல வைத்தியசாலைகள், பல்கலைக்கழகம் என்பவற்றைத் தூதுக்குழுவினர் பார்வையிட்டனர்.

அவற்றுக்கான நிதி வசதிகளையும் செய்திருந்தனர்.

பிரஸ்தாப குழு மேலும் பல நிதி வசதிகளை வடபகுதிக்குச் செய்ய இணங்கியுள்ளதாகவும், இதற்கான திட்டங்கள் பலவற்றை பார்வையிட்டதாகவும், அவைபற்றிய ஆவணங்களை பரிசீலனைக்கு எடுத்துச் சென்றுள்ளதாகவும் அறியவருகிறது.

## "குட்டி" பஸ் சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 14

காரைநகர் சாலைக்குச் சொந்தமான 'குட்டி' ரக பஸ்கள் சேவையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளன.

வெள்ளிக்கிழமை மாலை காரைநகர் துறைமுகம் பகுதியில் வைத்து 'குட்டி' ரக பஸ் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டதை அடுத்தே சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. (ஒ-10

## கிளிநொச்சி நகரில் தொண்டர்படையும்சோதனை

கிளிநொச்சி, மே 14

கிளிநொச்சி நகரப் பகுதிகளில் மக்கள் தொண்டர் படையினரும் இப்போது சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறுர்கள்.

கரடிப்போக்குச்சந்தி, பழைய பஸ் நிலையம், டிப்போச்சந்தி போன்ற இடங்களில் இந்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தச் சோதனை நடவடிக்கைகளின்போது இந்திய அமைதிப்படையினரும் கூடச் செல்கின்றனர். [ஒ-76)

## வீதித்தடை

சாவகச்சேரி — கண்டி வீதியில் அமைதிப்படைமுகாமுக்கு முன்னுல் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளது.

இதே நிலை புத்தூர்சந்தி முகாமுக்குமுன்னுலும் தொடர்கின்றது.

## இரணைமடுச் சந்தியில் அரச ஊழியர் சூட்டுக்கு பலி

கிளிநொச்சி, மே 14

கிளிநொச்சி, இரணைமடுச் சந்தி அமைதிப்படை முகாமுக்கு முன்னுல், கடந்தவெள்ளிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ஒன்றில் இரணைமடு விவசாய ஆராய்ச்சி நிலைய ஊழியர் ஒருவர் பலியானுர்.

இவர் முறிகண்டியைச் சேர்ந்த கே. நந்தகுமார் (வயது 34) என்பவராவார்.

மூன்று குழந்தைகளின் தந்தையான இவரது சடலம் கிளிநொச்சி மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டு பின்னர் அவரது மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது.

துப்பாக்கி தவறுதலாக வெடித்ததினுல் இச்சம்பவம் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-76)

## அமெரிக்க வீஸா பெறுவதற்கு தெரிவானேர் விவரம் நாளை

கொழும்பு, மே 14

அமெரிக்க பதிவுரிமை வீஸா கோரி விண்ணப்பித்தவர்களில் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் எத்தனை பேர் ''லொட்டோ'' முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்ற விவரத்தை அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் நாளை திங்கட்கிழமை அறிவிக்க உள்ளது.

அமெரிக்க ராஜாங்கத்திணைக்களம் இவ்விவரங்களை சம்பந்தப்பட்ட நாடுகளில் உள்ள தூதரகங்களுக்கு நாளை (திங்கட்கிழமை) அனுப்பி வைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்த வகையில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் கம்பியூட்டர் மூலம் டெபர் தெரிவு செய்யப்பட்டவர்களுக்குக் கடிதங்களை அனுப்பிவைக்கும்.

1991 ஆம் ஆண்டில் இருந்து 20 ஆயிரம் பேருக்கு அமெரிக்க வதிவுரிமை விஸா கிடைக்கவுள்ளது.

இந்த வாய்ப்பைப் பெற 120 நாடுகளில் இருந்து 32 லட்சம் விண்ணப்பப் படிவங்கள் உரிய முறையில் நிரப்பி அனுப்பப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-ா]

**சுபநேரம்**

14—05—1989
வைகாசி 01
ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:
08. 53 முதல் 10. 23 வரை
ராகுகாலம்:
04. 23 முதல் 05. 53 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
நவமி பிற்பகல் 1. 49 வரை

## குருநகர்-பாஷையூர் சச்சரவை சமரசம் செய்வதற்கு முயற்சி

குருநகர் மே 14

குருநகர் கோஷ்டிக்கும் பாஷையூர் கோஷ்டிக்கும் இடையிலான தகராற்றுக்குத் தீர்வு காணும் முயற்சியில் குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண.பி.எம். இமானு வேல் அடிகளாரும் பாஷையூர்சென். அன்ரனிஸ் ஆலய பங்குத் தந்தை வண. பிரான்சிஸ்அடிகளாரும்நேற்று தீவிரமகா ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுக் காலை 11 மணிக்கு பாஷையூர் பங்குத் தந்தை பணிமனையில் நடைபெற்ற சமரசக் கூட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகப் பிரதிநிதிகளும், பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

குருநகரைச் சேர்ந்தவர்களது உடைமைகளைத் திருப்பி ஒப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு ஆஸ்பத்திரி வீதியில் இல. 664 இல் ஞாயிறு தவிர்ந்த நாட்களில் நேரில் பார்வையிடலாம். மிஷன் சைஸ் டபிள் டிமை நிவியோலா. (516)

National T. V. 20'', 14'' Belling Oven National 2 in 1 5030, பாவித்த கட்டில், மேசை, சாப்பாட்டு மேசை, Cot, செற்றி செற், குசன் செற்றி இன்னும் பல உடன் விற்பனைக்கு உண்டு. ஸ்ரீராம், 3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (10871)

சொந்த பாவிப்பில் இருக்கும் One owner மொறிஸ் மரினா Morris marina A/C Full 1976 மொடல் 7 SRI தொடர் இலக்கம். 45, புதிய சிவன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 383 (165)/7, பிரம் பிள்ரோட், நல்லூர் யாழ்ப்பாணம். (10898)

வவுனியாவில் பத்தினியார் மகிளங்குளத்தில் (யாழ்ப்பாணம்—கண்டி வீதியின் அருகாமையில்) 6½ ஏக்கர் நெற்காணி விற்பனைக்கு உண்டு. [இது வவுனியா ரவுணிலிருந்து 1 Km தூரத்தில் உள்ளது.] விபரங்களிற்கு கிருஷ்ணசாமி ஓவசியர் 'கிருஷ்ணா இல்லம்' பத்தினியார் மகிளங்குளம், வவுனியா, அல்லது 36 கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். [520]

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் ஒருநாக பேட்டுக்குஞ்சு (18-5-89) வியாழக்கிழமை விநியோகிக்கப்படும். தடுப்பூசி போடப்பட்டது முன்கூட்டியே பதிவு செய்க இல 9, கந்தையா லேன், சுன்னாகம் [புகையிரத நிலையத்துக்கு அண்மையில்] [10891]

(Dekalb) பிறவுண் பேடு சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் (16-5-89) செவ்வாய்க் கிழமை விநியோகிக்கப்படும். பிறவுண் சேவல் குஞ்சுகள் 50க்குமேல் எடுப்பவர்களுக்கு விலை ரூ3/50 முன்கூட்டியே பதிவு செய்க இல:9 கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (392)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் சேவற்குஞ்சுகள் ஞாயிற்றுக்கிழமை 14-5-89 இல் விநியோகிக்கப்படும். சற்குணராசா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (517)

புறொயிலர் குஞ்சு, பேட்டுக் குஞ்சு, கறுப்பு, வெள்ளை சேவல் குஞ்சு ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். S. செல்வரெட்ணம், ஆலய வீதி, K. K. S. [393]

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Hy-line கறுப்பு வெள்ளை, Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய்/ புதன்கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம். தடுப்பு மருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கொடுக்கப்படும். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [சி/2518]

### ரைப்பிங் சேவை

தமிழ் - ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். தொகையான பிரதிகளுக்கு விசேட கழிவு உண்டு. Fudo மின்சார நிலைய வீதி, 39/17 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (பஸ் நிலைய முன்பாக, Samy&Co அருகாமையில்) (507)

### சேவை

தட்டச்சு றோணியோ வேலைகள் மிகத் தெளிவாகவும் குறித்த நேரத்திலும் செய்து கொடுக்கப்படும். Teens Copy, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/2317)

### வீடும் காணியும் விற்பனைக்கு

உரும்பராயில் 4 அறை கல் வீட்டுடன் 2 பரப்பு காணியும் இத்துடன் 2 பரப்பு காணி பாதையுடன் தண்ணீர் வசதியோடு திறம் சுற்றாடலில் விற்பனைக்கு உண்டு. இல. 59, மே / பா உதயன், யாழ்ப்பாணம். (10900)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler பேட்டுக்கோழி, சேவல், சூப் குஞ்சு, விருத்துக் குஞ்சு வகைகள் எப்பொழுதும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஒழுங்கை முகப்பிலும் எங்கள் பண்ணை வாசலிலும் Nallur Video Centre என்னும் விளம்பரப் பலகை உண்டு. Nallur Farm Centre, 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர், (சி/2519)

### காணி விற்பனை

கோப்பாய் வடக்கு பருத்தித்துறை வீதி வராம்பற்றையில் (A. G. A. கந்தோருக்கு சமீபமாக) 6½ பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு V. லக்ஷ்மி மே/பா எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட், இருபாலை சந்தி. (508)

### காணி விற்பனை

பரந்தன் முல்லைத்தீவு றோட் சந்தியிலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள பூங்காவனச் சந்தி றோட் முகப்பில் ஆறுபரப்பு நெற்காணி விற்பனைக்கு உண்டு. நெற்கொள்வனவு சந்தைப்படுத்துதல் ஆலை கடைகளுக்கு கேந்திர ஸ்தானம் தொடர்பு: க. சுப்பையா ஓய்வுபெற்ற ஓவசியர், தெல்லிப்பளை [386]

### 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில்

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமிழ் மொழியில் அதிக புள்ளிகள் பெறவும் வசதியான பாடசாலையில் அனுமதி கோரவும் வழிசெய்யும் கட்டுரைத் தேன் துளி 60. ஆக்கம்: க. சொக்கலிங்கம் M.A. உயர் கல்விப் பதிப்பக வெளியீடு. விலை ரூபா 17/50. புத்தகசாலைகளில் கிடைக்கும். (10883)

### NEW CITY TRADERS

Dayton T. V 12'' 14'' B & W 14'' 20'' கலர் Phillips 20'' Gas Cooker, Hotplate Booster, T. V Antennas Pipe fan& றேடியோ வீடியோ கசெற் ரெக்கோடர் ஓடியோ வீடியோ கசெற், Head, T.V stand, Film roll சுவர், கை மணிக்கூடுகள் மற்றும் ஆடம்பரப் பொருள்களுக்கும் New City Traders 135, Kasturiar Road, Jaffna. [C/2505]

### அழகியற்கல்வி

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் உடை தைத்தல், கேக் தயாரித்தல், மணமகள் உடை அலங்காரம், சிகை அலங்காரம், மனை அலங்காரம், விரைவில் அழகுசாதன நிலையமும் ஆரம்பிக்கப்பட உள்ளது. தொடர்பு: நிர்வாகி Miss S. பவளம் அனித்தா ஸ்கூல், K. K. S. றோட், கொக்குவில். (514)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2433]

### வகுப்புக்கள்

Typing - Short Hand வகுப்புக்கள். வாரநாட்களிலும் வார இறுதி நாட்களிலும் வெவ்வேறாக நடத்தப்படுகின்றன. பயிற்சி முடிந்ததும் சான்றிதழ் வழங்கப்படும். Bond Institutes, 53A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/2316)

### தேவை

Mine thear நடத்துவதற்கு T.V 20'' video deck genearator தேவை. தொடர்பு: S. Thevathasan New No 221 Kachcheri Nallur Road, Jaffna. [518]

யாழ். நகரில் பலசரக்கு மாளிகை ஒன்றில் பெண் விற்பனை மேற்பார்வையாளர் (Bill clark உடன் தேவை. க.பொ.த. சாதாரண வகுப்பு வரை தேர்ச்சி பெற்றவர் விரும்பத்தக்கது. மாநகர சபை எல்லைக்குள் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு; 518 C/o உதயன். (519)

### மணமகன்தேவை

யாழ் இந்து வேளாளர் B. A. (Hons) ஆசிரியை 31 வயது, யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகி வரவுள்ள அழகிய கன்னிப் பெண்ணுக்கு வரன் தேவை. சீதனம் அதிகம் இல்லை. சாதகக் குறிப்பு மற்றும்விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். 514 C/o உதயன். (509)

### மணமகள் தேவை

யாழ்ப்பாண வேளாள கத்தோலிக்கத் தாய் தனி தனியார் தாபனத்தில் உற்பத்தி கூட்டிணைப்பாளராக [Produtlon Coordinator] கடமையாற்றும் 33 வயதும் 5' 7'' உயரமும் ரூபா 6000/- மாதச்சம்பளம் பெறும் மணமகனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த மணமகளைத் தேடுகிறார். தொடர்பு: 511 C/o உதயன். [395]

### ஆசிரியை தேவை

மாநகரசபை எல்லைக்குள் 1ஆம்வருடம்படிக்கும் மாணவனுக்குவீட்டில் வந்து பாடம் சொல்லிக்கொடுப்பதற்கு பயிற்றப்பட்ட ஆசிரியை தேவை. தேவை ஏற்படின் தங்குமிடவசதி செய்துகொடுக்கப்படும். இல. 60 மே/பா உதயன் யாழ்ப்பாணம். [10907]

### திருமண சேவை

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. ஆனால் இத் திருமணங்கள் விடா முயற்சியால் நிறைவேற்றி வைப்பவர்கள் நாமே! உங்கள் பிள்ளைகள் என்றும் மனமகிழ்ச்சியாகவாழமுற்றுந் தகுந்த மணமகன், மணமகளைத் தேடி அலையாது நாட வேண்டிய இடம். புதிய மாங்கல்யா மல்ரி சேவிஸ், 14, விதானையார் ஒழுங்கை, கொழும்புத்துறை மேற்கு, திருவிளங்கம். (505)

### வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் தலைச்சோடனை மற்றும் நகைகளை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளநாடுங்கள். அனித்தா ஸ்கூல், பூநாறி மரத்தடி, கொக்குவில், and மினிரேட்ஸ் சென்ரர், No 3, J. M. C. Building, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (399)

எங்களுடைய மேல்மாடியில் காரியாலயம், களஞ்சியம் போன்ற பாவனைக்கு சகல வசதிகள் கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு. காலை 9 மணி முதல் 11 மணிவரை விபரங்களுக்கு நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ் சைனீஸ் றெஸ்ரோரன்ற் (Pvt) Ltd, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [365]

### ஜோதிடம்

29. 6. 89 வியாழ மாற்றம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் முற்பிறப்பு வரலாறுகளும் விலை ரூ 4.00 எங்கும் கிடைக்கும் நூலாசிரியர் (ஆத்ம ஜோதி) Prof சத்தியதாஸன் Mech B, blec. E விநியோகஸ்தர்கள் கனகா ரேடர்ஸ், திண்ணவேலிச் சந்தி. (10913)

### தாதிகள் தேவை

கிளிநொச்சியில் உள்ள தனியார் மருத்துவ மனைக்கு அனுபவமும் திறமையும் வாய்ந்த தாதிகள் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். இருப்பிட வசதி உண்டு. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: சாந்தி வைத்தியசாலை, கிளிநொச்சி. [397]

### ADVANCED ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 20-5-89 சனி, ஞாயிறு நாட்களில் நேரம் பகல் 10.30 - 12.00 மணி. S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். [10837]

### SPOKEN ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 22-5-89 திங்கள், புதன் நாட்களில் நேரம் காலை 6 மணி — 7½ மணி வரை S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். [10838]

### தவறிவிட்டது

தேவமணி சின்னத்துரை ஆகிய எனது அடையாள அட்டை [617590093 X] 10-5-89இல் நெல்லியடி இமையாணன் வீதியில் பேர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் உதயன் காரியாலயத்தில் அல்லது தங்கமால், அல்வாய் தெற்கு அல்வாய் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். (10904)

## மென்பந்து இறுதிப்போட்டி

யாழ்ப்பாணம், மே 14

பருத்தித்துறை மாவட்ட கிரிக்கட் சங்கம் நடத்தும் முதலாவது மென்பந்துச் சுற்றுப் போட்டியின் (1989) இறுதிப் போட்டியும் பரிசில் வழங்கலும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப 2மணிக்கு நெல்லியடி ம.ம.வி மைதானத்தில் நடைபெறும். இறுதிப் போட்டியில் புலோலிப் பென்சன் வி.க. வை. எதிர்த்து வதிரி கலைமகள் வி. க. விளையாடும்.

கட்/ நெல். ப.நோ கூ. சங்கத் தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை இதில் பிரதம விருந்தினராகவும் திரு. வ.சிவசோதி, திரு. பொ. ஸ்ரீதரன், திரு. சு. சண்முகசுந்தரம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளுகின்றார்கள்.

தலைவர் திரு. வே. தங்கராசாவும் செயலாளர் திரு. தா. மு. வேதாபரணமும் போட்டி, பரிசளிப்பு ஒழுங்குகளைக் கவனிக்கின்றார்கள். (க)

## 60 ஆம் நாள் நினைவஞ்சலி



மோகன் (சாந்தன்)

தோற்றம்: 07 - 06 - 1969 மறைவு: 14 - 03 - 1989

தாயக மண்ணிற்காய்
தன்னுயிர் ஈந்த
மண்ணின் மைந்தனுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்!

யாழ்ப்பாணம். - நண்பர்கள். (சி/2478)

## கண்ணீர் அஞ்சலி



கனகசபை சண்முகசோதி
(செல்வம் தேவன்)

அன்னை அணைப்பில்: 30 - 03 - 1964 அழிப்பில்: 09 - 05 - 1989

9-5-1989 அன்று மாலை 6.45 மணியளவில் அகால மரணமடைந்த T. K. S. ரேட்ஸ் அன்கிறஸ்ஸு பேக்கறி உரிமையாளர் கனகசபை - சண்முகசோதி (செல்வம், தேவன்) அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலி உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இவ் அறிவித்தலை உடன் தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

திருமதி கனகசபை
குடும்பத்தினர்.

சோதி வீதி,
[illegible] [484]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்: இந்திரன்
(உயர்தர வகுப்பு மாணவன்)

• • •

செல்வன்; வைகுந்தகிரிநாதன்
(உயர்தர வகுப்பு மாணவன்)


ஈழவர் மனங்களில் 14. 4 89

மாணவர் இளைஞர் பொது மன்றத்தின் தென்மராட்சிப் பிராந்திய முன்னணி உறுப்பினர் இந்திரன், பாடசாலை மாணவத் தோழர் வைகுந்தகிரிநாதன் 14 - 4 - 89 இல் சாவகச்சேரியில் உயிர் நீத்தவர். மரணித்த தோழர்களுக்கு மாணவர் இளைஞர் பொதுமன்றம் அஞ்சலி செலுத்துகிறது.

- தென்மராட்சி மாணவர்கள்,
- மாணவ இளைஞர் பொதுமன்றம்,
(GUYS)

(10921)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



சிறியண்ணா

மறைவு: 14 — 04 — 1989

தாயக மண்ணிற்காய்
தன்னுயிர் ஈந்த
மண்ணின மைந்தனுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்

யாழ்ப்பாணம் — நண்பர்கள்
[சி-2479]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

ஹரன்

மறைவு: 14 — 04 — 1989

தாயக மண்ணிற்காய்
தன்னுயிர் ஈந்த
மண்ணின் மைந்தனுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்

யாழ்ப்பாணம். — நண்பர்கள்
[சி-2477]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20ஆவது

## பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் க. அரவிந்தன்

அளவெட்டியைச் சேர்ந்த கந்தையா- அரவிந்தன் இன்று தனது 20 ஆவது பிறந்ததினத்தை அவர் தற்போது இருக்கும் 22/2, விதானையார் வீதி, சுண்டிக்குளி இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்ருர். அரவிந்தன் பல்கலையும் பயின்று:

அறிவில் ஆதவன் போல;
ஈகையில் பாரிபோல;
கல்வியில் கலைமகள் போல;
பண்பில் ஸ்ரீராமர் போல;

பல்லாண்டுகாலம் வாழ்கவென அம்மா, அப்பா, அக்கா, தங்கை மற்றும் இராஜசூரியர் குடும்பத்தினர் நண்பர்கள் வாழ்த்துகின்ருர்கள்

(C/2547)



## Training Course in Counselling

Participants are invited to apply. Forms can be collected at the office of the Association for Health and Counselling at, 21, First Cross Street, Jaffna.

Only those forms completed and returned by the 20th May 1989 will be considered. Applicants will be screened before being accepted on to the course as places are limited.

The course will run on week ends between June 3rd and October 7th 1989. A nominal fee for attending the course will be required. The course will be held in English. [10892]



## தொழில் நுட்பப் பயிற்சி

**நவஜீவனம், பரந்தன்.**

| | | |
|---|---|---|
| கடைச்சல் இயந்திரம் | — | Lathe machine |
| அடிப்படை இயந்திரவியல் | — | Basic Engineering |
| பொறிமுறைவரைதல் | — | Engineering Drawing |
| அடிப்படை மின்னியல் | — | Basic Electricity |
| வாயுப்பற்ற வைப்பு | — | Gas Welding |
| மின்ஒட்டு | — | A C Welding |

அனைத்து பாட நெறிகளும் இணைத்தே வழங்கப்படும்.
பயிற்சிக்காலம் ஒரு வருடம்

தகைமைகள்:
க. பொ. த (சா/த) நான்கு பாடம் சித்தி அவசியம்

பிரவேசக்கட்டணம் 200/- (மீளளிக்கப்படும்)
மாதாந்தக்கட்டணம் 100/-
விடுதி வசதி உண்டு.

31-05-89 க்கு முன்னர் அனைத்து விண்ணப்பங்களும் எமக்குக் கிடைக்க வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 31 - 05 - 1989

இயக்குநர்,
நவஜீவனம், பரந்தன்.

(478)



● கனடா

இம்மாதம் 23ஆந் திகதி பிரயாணம் 19-05-89க்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

● இத்தாலி

10 பேர் உடனடியாகப் பிரயாணம் மேற்கொள்ள விசா எம்மிடத்தில் உண்டு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

● தாய்வான்

தொழிற்சாலைக்கு தொழிலாளர் தேவை.
சம்பளம் — 250 U. S D.

இவை எல்லாவற்றிற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**V. T. R. TRAVELS**
41, 3rd Cross Street,
JAFFNA.

[482]


# வடபகுதி வைத்தியசாலைகளுக்கு அதிக வலுவுள்ள ஜெனரேட்டர்கள்

## வழங்குவதற்கு பிரிட்டிஷ் தூதுக்குழு இணக்கம்

யாழ்ப்பாணம், மே 14

வடபிரதேசத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அதிக வலு உள்ளஜெனரேட்டர்களை வழங்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரிட்டிஷ் தூதுக்குழுவினர் ஒப்புதல் அளித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு கடந்த வாரம் விஜயம் மேற்கொண்ட பிரிட்டிஷ் தூதரகத்தைச் சேர்ந்த இரண்டாவது செயலாளர் திரு. மைக்கல்பூட், கிறவுன் ஏஜன்சியைச் சேர்ந்த செல்வி மாகிறெட் மக்ஆதர், செல்வி கில்லறிவோகன் ஆகியோர் யாழ், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த வைத்தியசாலைகளுக்கு விஜயம் மேற்கொண்டனர்.

யாழ் மாவட்ட சுகாதார சேவைப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி என். கனகசபை இக்குழுவினரை தெல்லிப்பளை, பருத்தித்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி, பளை, மயிலிட்டி மார்புநோய் சிகிச்சை வைத்தியசாலை உட்பட மற்றும் சிறுவைத்தியசாலைகளுக்கும் அழைத்துச் சென்றனர்.

குறைபாடுகள் குறித்து அவ்வவ் வைத்தியசாலை அதிகாரிகளுடன் அவர்கள் கலந்துரையாடினுர்கள்.

பருத்தித்துறை, தெல்லிப்பளை, சாவகச்சேரி, கிளிநொச்சி, ஊர்காவற்றுறை ஆகிய வைத்தியசாலைகளுக்கு பெரிய அளவிலான கூடிய வலுவுள்ள ஜெனரேட்டர்களும், சிறிய வைத்தியசாலைகளுக்கு குறைந்த வலுவுள்ள ஜெனரேட்டர்களும் வழங்க பிரிட்டிஷ் தூதுக்குழு உறுதி தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை, தெல்லிப்பளை, கிளிநொச்சி ஆகிய வைத்தியசாலைக்கு எக்ஸ்றே கருவி இயந்திரமும் வழங்க உறுதி கூறப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய வைத்தியசாலைகளுக்கு பிரசவ அறை குளிர் ஊட்டப்பட்ட கருவிகளுடன் சாதனங்கள் வழங்கவும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பளை வைத்தியசாலைக்கு பல் சிகிச்சை நிலைய கருவிகள் வழங்கவும் இக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

அத்துடன் சளி அகற்றும் கருவிகள், குழந்தைகள் பாதுகாக்கும் கருவிகள் உட்பட பல உதவிகளை பிரிட்டிஷ் அரசு வழங்கவிருக்கிறது.

மேற்படி குழுவினர் ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு விஜயம் செய்யவும் பின்பு யாழ் போதன வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி சண்முகத்துடன் பேச்சு நடத்தவும் ஏற்பாடாகி உள்ளது.

மேற்படி குழுவில் வந்துள்ள இரண்டாவது செயளாளரும், 'கிறவுன் ஏஜன்சி' ஆலோசகர்களும் இங்கிருந்து நேற்றுச் சனிக்கிழமை கொழும்பு திரும்பி, அங்கிருந்து பிரிட்டன் சென்று அரசிடம் உதவி பற்றி எடுத்துக் கூறுவார்கள்.

பெரும்பாலும் உதவிகள் ஆகஸ்ட்டுக்கு முன் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வெளிச்சம் தராத வெளிச்ச வீடு!

காரைநகர், மே 14

காரைநகர் கோவளம் கடற்கரையில் அமைந்துள்ள 125 அடி உயரமுடைய கலங்கரை விளக்கம் மிக மோசமான நிலையில் உள்ளது என அறிய வருகிறது.

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேல் இதன் வெளிச்சப் பகுதி இயங்குவதில்லையாம். மேலும் அதன் மேற்பகுதியில் அமைந்துள்ள அரிய கற்கள் விளக்குகள் என்பன களவாடப் பட்டுள்ளன. உச்சிப் பகுதியை சென்றடையும் ஏணிப்படிகள் உடைக்கப்பட்டுள்ளன. அதன் காவல் அரணும் அறவே பயன்படுத்த முடியாத அளவு நொறுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அமைந்துள்ள 14 கலங்கரை விளக்கங்களுள் இரண்டாவது பெரியது காரைநகர் கலங்கரை விளக்கம். பாக்கு நீரிணைப்பகுதியில் உள்ளதனுல் இதன் தேவை மிக இன்றியமையாதது. மேலும் ஆழ்கடல் மீனவர்களுக்கு கரை ஒதுங்கும் வாய்ப்பை அளிக்கும் கலங்கரை விளக்கம் இன்று கவனிப்பார் அற்று வீணே கிடக்கின்றது.

(ஒ-73)

# கிராம மக்களின் அபிவிருத்திக்கு சனசமூக நிலையம் உழைக்கவேண்டும்

## ச. ச. நிலையக் கூட்டத்தில் உரை

மண்டைதீவு, மே 14

''சனசமூக நிலையங்கள் கிராமப்பகுதி மக்களின் கல்வி, கலை பொருளாதார அபிவிருத்திகளுக்கு அயராது உழைக்க வேண்டும். பத்திரிக்கைகள் சஞ்சிகைகள்போடுவதுமட்டும் சனசமூக நிலையங்களின் கடமை என்று கருதக் கூடாது''

மண்டைதீவு உதய சூரியன் சன சமூக நிலையத்தில் நடைபெற்ற விசேட கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய பிரபல சமூகசேவையாளரும் வர்த்தகருமான திரு. எஸ். குமாரலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நிலையத் தலைவர் திரு. ஸ்ரீ ரங்கநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. குமாரலிங்கம் தொடர்ந்து பேசுகையில்.

இப்பகுதி இளைஞர்களுக்கு விளையாட்டுத்துறையில் ஆர்வம் ஏற்படுத்தக்கூடிய முறையில்விளையாட்டுப் போட்டிகளை நடத்த முன்வரவேண்டும் என்ருர்.

மண்டைதீவு கிராமசேவை அலுவலர் திரு. என். சுந்தரராஜன் பேசுகையில் பொதுச் சேவையில் ஈடுபடும் இளைஞர்களை இப்பகுதி மக்கள் நன்கு மதிக்க வேண்டும். அவர்களின் செயற்பாடுகளுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும் என்ருர்.

மண்டைதீவு இந்து இளைஞர் திருமுறைக்கழக செயலாளர் பேசுகையில்.

சனசமூக நிலையங்கள் சமய அறிவை வளர்க்க முயற்சிக்க வேண்டும்.

எமது சைவசமயத்தின் சிறப்புக்களை இப்பகுதி மக்களுக்கு கருத்தரங்குகள் மூலம் தெரிவிக்க வேண்டும். மனிதன் முழுமையான அறிவைப் பெற வேண்டுமானுல் சமயத்தின் தத்துவங்களை பெருமைகளை அறிந்து இருக்க வேண்டும் என்ருர். மற்றும் பலர் பேசினுர்கள்.

பட்டிமன்றம் கவியரங்கம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. இறுதியில் நிலையத்தின் அதிஷ்டலாபச்சீட்டு இழுப்பு வைபவம் நடைபெற்றது.

(க-88)

# மூக்குக் கண்ணுடி அன்பளிப்பு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் அண்மையில் கண் பார்வை குறைந்தவர்களுக்கு மூக்குக் கண்ணுடிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் லயன் டாக்டர் எம். அருளானந்தம் அவர்களின் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

(க-117)

# நூலகத் திறப்புவிழா

தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் 15 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு பாடசாலை அதிபர் திரு. அநு. வை. நாகராஜன் தலைமையில் நூலகம் ஒன்று திறந்து வைக்கப்படும்.

பாடசாலையின் பழைய மாணவரான திரு. கனகரத்தினம் சிவசம்பு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ச)


# விற்பனையாளர்கள் தேவை

யமகா இசைக் கருவிகளை வட-கிழக்கு மாகாணங்களில் விற்பனை செய்யக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

பலவகை யமகா இசைக் கருவிகள் செவிப்புல உபகரணங்கள் (Pianos, Electones, Portables, Pianicas) ஆகியவற்றை வட- கிழக்கு மாகாணங்களில் விற்பனை செய்யக்கூடிய நன்கு தாபிக்கப்பட்டுள்ள கம்பனிகளுடன் தொடர்புகொள்ள விரும்புகிறேம்.

கம்பனி தாபிக்கப்பட்டுள்ள இடம் முதலிய முழு விபரங்களுடன் 30 நாட்களுக்குள் தொடர்புகொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
யமகா மியூசிக் சென்டர்
64 கிறீன் பாத் கொழும்பு-7
Telex: 21230 MIKERIS CE FAX: 598322

SAA



★ ரெருசோ ★
மூலப்பொருள்கள் விற்பனை

✶ வெளிநாட்டு சிப்ஸ்
✶ கலர் பவுடர் வகைகள்
✶ வெள்ளைச் சீமெந்து
✶ மற்றும் தேவையான பொருள்கள்

ரெருசோ மாபிள் பதிக்கும் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

★ மாபிள்ஸ் ★

281-D, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2362)



ஓம் சக்தி!
கிரேக்க கப்பல்களில்

## வேலை வாய்ப்புகள் (உடனடியாக)

AB OILER
BOSON FRESHERS (புதியவர்கள்)
மற்றும்: OFFICERS
RADIO OFFICER ELECTRICIAN
IInd OFFICER IIIrd ENGINEER

மற்றும்
★ கனடா ★ ஜேர்மன்
★ பிரான்ஸ் ★ இத்தாலி
★ சுவிஸ் ஆகிய நாடுகளுக்கான
● பிரயாண ஒழுங்குகள்
● பாஸ்போர்ட் ● பொன்ட்
ஆகியனவும் செய்து தரப்படும்.

''முற்பணம் அறவிடப்படமாட்டாது''

சந்திக்கும் நேரம்:-
காலை 6. 00 மணி — 8. 30 மணி
மாலை 3. 30 மணி — 7. 00 மணி

**சுஜிதா என்ரபிறைசஸ்**
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

சிறுப்பிட்டி முருகன் ஸ்ரோர்ஸில் விசாரிக்கவும்.
(பப்பன் கடை) C/2569)



யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
தேங்காய் மட்டை (பொச்சு)
விநியோகத்திற்கான

## கூறுவிலை அறிவித்தல் 1989

தேங்காய் மட்டை (பொச்சு) க்கான கூறுவிலைகள் விநியோகத்தர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. யாழ். மாநகராட்சி மன்ற மராமத்துப்பொறியியலாளரிடமிருந்து 29-05-1989ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிவரை ரூபா 50/- செலுத்திப் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கூறுவிலைகள் தயாரிக்கப்பட்டு 31-05-1989 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

கூறுவிலைகளைத் தாங்கிவரும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தேங்காய் மட்டைக்கான கூறுவிலை-1989'' எனக் குறிப்பிட்டு அரக்குமுத்திரை பொறிக்கப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்,

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம். 12-05-1989. (சி/2570)



## COMPUTER PROGRAMMING

(கம்பியூட்டர் பயிற்சி)

**Oslo Science Academy**

(கொத்தாவத்தை, பருத்தித்துறை, காங்கேசன்துறை)

அடுத்த (BASIC) வகுப்பு ஆரம்பம்:
திகதி 14-06-1989

எமது வல்வை வாழ் அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க கம்பியூட்டர் வகுப்பு வல்வை, நெடியகாட்டில் உள்ள பாலர் பாடசாலையில் எதிர்வரும் 20-05-1989 ஆம் திகதி 12 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. உங்கள் பெயர்களை இப் பாடசாலைக்கு பொறுப்பாயிருக்கும் கண்ணன் அவர்களிடம் பதிந்து, மேற்கொண்டு விபரங்களையும் பெற்றுக் கொள்ளவும்.

(481)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி அழைப்பு



**திருமதி இலட்சுமிப்பிள்ளை சோமசுந்தரம்**


**தோற்றம்:** 16 - 07 - 1914 **மறைவு:** 14 - 04 - 1989

எங்கள் குடும்பத்தலைவியாகவும் வழிகாட்டியாகவும் விளங்கிய அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் 14 - 05 - 1989 இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அத்தருணம் தவறாது சமூகம் தந்து அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம். அவரின் மரணச்சடங்குகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிள்ளைகள்.

உரும்பராய் வடக்கு,
உரும்பராய். (10873)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**மலர்வு:** 21 - 10 - 1961

**உதிர்வு:** 14 - 04 - 1989

**சச்சிதானந்தம் தயாபரன் (தயா)**

(நொர்தேண் பார்மஸி ஊழியர்)

அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எங்கள் எல்லோரையும் விட்டுப் பிரிந்து சென்ற தயாபரனின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

1. Northern Pharmacy Staff
   562, Hospital Rd, Jaffna.
2. Trade Link Distributors,
   Uduvil.
3. Vanika Medicals,
   274/2, Hospital Rd, Jaffna.
4. The Jaffna Co-operative Stores Ltd,
   420, Hospital Rd, Jaffna.
5. Jude Pharmacy,
   69, Power House Rd, Jaffna.
6. Cyrils Pharmacy Ltd..
   121 1/1, Power House Rd, Jaffna.

[10894]

## 60 ஆம் நாள் நினைவஞ்சலி



**ஞானசொரூபன் (சாள்ஸ்)**

**தோற்றம்:** 27 - 6 – 1970 **மறைவு-** 14 – 3 - 1989

தாயக மண்ணிற்காய்
தன்னுயிர் ஈந்த
மண்ணின் மைந்தனுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்!

யாழ்ப்பாணம். —நண்பர்கள்.
(சி/2472)

# எத்தகைய உணவு வகைகளை பாடசாலைகள் பயன்படுத்தலாம்?

## கல்வித் திணைக்களம் பாடசாலைகளுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மே. 14

பாடசாலைகளில் மதிய உணவு வழங்கும் திட்டத்தில் எவ்வகையான உணவு வகைகளை வழங்கவேண்டும் எனயாழ். கல்வித் திணைக்களம் சகல பாடசாலைகளுக்கும் அறிக்கை ஒன்றின் மூலம் ஆலோசனை வழங்கியுள்ளது.

இதற்கமைய வழங்கப்பட வேண்டிய உணவு, அளவு, உணவில் அடங்கியுள்ள கலோரிப் பெறுமானம் என்பன அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இதன்படி தாளித்த கடலை, வாழைப்பழம், பயிற்றம் துவையல், கூட்டுச்சாதம், கௌபி, மரக்கறி கலந்த ரொட்டி, பணிஸ், பால், முட்டை, பாண், மாஜரின், மரக்கறி. இரூல் முதலியன போட்டுச் சமைத்த அரிசிக் கஞ்சி, மரவள்ளிக் கிழங்குச்சம்பல், கருவாடு சேர்க்கப்பட்ட இலைக் கஞ்சி, பருப்புச் சாம்பார், மீன் கருவாடு, பலாக் கொட்டை சேர்ந்த புளிக் கஞ்சி, சோறும் சாம்பாரும், தோசை, குரக்கன் இனிப்பு, பழரொட்டி என்பன வழங்க சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இதில் சராசரி 754 கலோரி சத்துக்கள் பேணப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-9)

MODERN
EDUCATION CENTRE
KARAVEDDY

ஆண்டு 5
புலமைப்பரிசிலுக்கான பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்: 14- 05- 19o9 ஞாயிறு
வகுப்புகள்:
திங்கள், புதன், வெள்ளி, ஞாயிறு
4 - 5 மொழி — 5 - 6 கணிதம் நடைபெறும்.
(462)

ஐரோப்பிய நாடுகள்
கனடா
அமெரிக்கா
அவுஸ்திரேலியா
குடியேற்ற ஆலோசனைகள் மற்றும் ஏற்பாடுகள்
தொடர்பு:
P V. Murthi
253 2/1, Galle Road,
Bambalapitiya,
COLOMBO-4
[ 2ஆம் மாடி "Pilgrimways" கட்டடம்
Thomas Cook காரியாலயத்திற்கு அருகில் ]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

14. 05. 1989

***



**மலர்வு:** 22 | 07 | 1963

**உதிர்வு:** 14 | 04 | 1989

வெற்றிவேலு பந்மாவதி அவர்களின்
அன்பு மகள்

**திருமதி யோகராசா ஞானமலர்**

குலமகளே குணக்குன்றே
குல விளக்கே மலரே!
சிறப்பும் இனிமையும் கருணையும்
எழிலும் சார்ந்த திருவுருவம்
எம்மை எல்லாம் மகிழ்விக்கும் - இனிய
வார்த்தையும் கொண்ட மலரே!
வாழும் வயதில்
பாழும் விதி பிரித்ததுவே!
ஆல விருட்சமாய் அன்பு நிழல் தந்து
சோலையாய் நீ இருந்து சொர்க்கம் சென்றது ஏனோ?
மழலையுடன் மலர் நீ - எழில்
கொஞ்சும் வேளையிலே
கொடுங்காலன் உனை அழைத்தது தான் ஏனோ?
புது வருட வேளையிலே
பொங்கி எழும் கண்ணீரில் - உன்
குடும்பத்தைக் கண் கலங்க வைத்து
விண்ணுலகு புகுந்தாயே
நினைவுகளோ ஓயவில்லை – உங்களைப்
பிரிந்ததால் வேதனைகள் குறையவில்லை
மலரே இந் நாளில் அல்ல – உம்மை
நாம் எந் நாளுமே மறவோம்.

உம் ஆத்ம சாந்திக்காய் எம் இதய விளக்கேந்தி கண்ணீர் மலர் தூவி ஏந்துகரம் தந்து நிற்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணவர் யோகராசா,
மகள் – பதிமலர்.

புளியங்கூடல் – தெற்கு,
ஊர்காவற்றுறை.

(480)

## கிளிநொச்சியில் தற்கொலை கூடுகிறது

பச்சிலைப்பள்ளி, மே 14

கிளிநொச்சிப் பகுதியில் தற்கொலை செய்பவர்களின் தொகை அதிகரித்துள்ளது. இறப்பவர்களில் பலர் நஞ்சருந்தியும் அலரிவிதை உட்கொண்டும் தற்கொலை புரிந்துள்ளனர்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் நஞ்சருந்துபவர்களுக்கு கொடுக்கப்படும் மருந்து வகைகள் இல்லாததால் இறப்புக்கள் அதிகரிக்கின்றன என அறியப்படுகிறது.

இறப்பவர்களில் பெரும்பாலானோர் இளம் பெண்களாவர். (ச – 117)

## மேலதிக நேர சம்பளம்

கொழும்பு, மே 14

அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஆகியவற்றில் கடமையாற்றும் அலுவலகப் பதவியினர்களுக்கு காலை 8 – 30 மணிக்கு முன்னர் மேலதிக நேரச்சம்பள வேலைக்கு அங்கீகாரம் வழங்கப்படமாட்டாது.

அரசாங்க நிருவாக மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு சகல அமைச்சின் செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் இதனை அறிவித்துள்ளது.

மேலும் வாரமொன்றுக்கு மேலதிக நேரச்சம்பள வேலைக்கான 10 மணித்தியால எல்லை கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படல் வேண்டுமென்பதுடன் இந்த எல்லையிலான எந்த விஞ்சுதையும் – திணைக்களத்தலைவரினாலேயே செயலாளரினாலேயே அங்கீகரிக்கப்படல் வேண்டுமெனவும் அறிவித்துள்ளது. (க - 7)

## நியமனம்

வவுனியா மாவட்டத்திற்கு ஏழு வெளிவாரி பட்டதாரிகள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். கலைப்பட்டதாரிகளான இவர்களில் ஒருவர் சிங்களப் பாடசாலைக்கும் ஏனைய அறுவரும் தமிழ் பாடசாலைக்கும் நியமனம் பெற்றுள்ளார்கள்.

ஆசிரியர் பற்றாக்குறை கூடுதலாக நிலவும் கிராமப்புறப் பாடசாலைகளுக்கே இவர்கள் கடமை ஏற்க அனுப்பப்படவுள்ளார்கள் என்று கல்வித் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார் (க–164)

## அமைச்சு அலுவல்கள் பரவலாக்கம்

மட்டக்களப்பு, மே 14

சுகாதார அமைச்சின் அலுவல்கள் மாகாண சபைக்கு பரவலாக்கப்பட்டுள்ளதையடுத்து நிர்வாக ரீதியிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் மார்பு நோய் சிகிச்சை பிரிவு (இலங்கை கயரோக தடுப்பு இயக்கம்) மலேரியா தடுப்பு இயக்கம், தொழு நோய் வைத்திய பிரிவு என்பன தற்போது மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

முன்பு மேற்படி பிரிவுகள் தனித்தனியாக இயங்கியமை குறிப்பிடத்தக்கது. (க–21)

K. K. ELECTRONICS

- அதிநவீன வீடியோ கமெராக்கள் மூலம் உங்கள் மங்களகரமான வைபவங்களை ஒளிப்பதிவு செய்து கொள்ளவும்,
- வெளிப்புற ஸ்ரில் கலர் படப்பிடிப்புகளுக்கும்,
- பழைய புதிய தமிழ், ஆங்கிலம், ஹிந்தி திரைப் படங்களை மிகத் தெளிவாக ஒளிப்பதிவு செய்து கொள்ளவும், வாடகைக்கு பெற்றுக்கொள்ளவும்.
- பழைய புதிய திரைப்படப் பாடல்களை ஒலிப்பதிவு செய்து கொள்ளவும்.
- T. V. டெக், மற்றும் மின்சார உபகரணங்களை சிறந்த முறையில் திருத்தி பெற்றுக்கொள்ளவும்.

நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்:
கே. கே. எலக்ரோனிக்ஸ்

No. 27, மின்சாரநிலைய வீதி, 3ஆவது ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
பழைய கண்டி, காரைநகர்.
(C/2544)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. கார்த்திகேசு இராஜதுரை (அருமை)**

(புகையிரத என்ஜின் சாரதி அனுராதபுரம்)


**ஆண்டவன்படைப்பு:** 19 05 1936 **அழிப்பு:** 14-05–1985

குடும்பத்தின் காவலராகி
குழந்தைகளின் உள்ளமதாகி
விருந்தோம்பும் பண்பினராகி
வெள்ளை உள்ளத்தவராகி
விடிவிளக்கு எமக்காய் ஆகி — எம்
சிந்தையிலே நின்றுலாவும் எந்தையே
அஞ்சலித்தோம்!
நீங்கள் அணையாவிளக்கு எமக்கு!!
ஓம்...! சாந்தி!! சாந்தி!!!

அன்பு மறவாத மனைவி, மகள்மார், மகன், மாமன், மாமி, மச்சான்மார், மச்சாள்மார்.

மின்சார நிலைய ஒழுங்கை,
சுன்னாகம். (சி/2554)

## 120 ஆம் நாள் நினைவஞ்சலி



**ஜூலியன்**

**மறைவு:** 14 - 01 - 1989

தாயக மண்ணிற்காய்
தன்னுயிர் ஈந்த
மண்ணின் மைந்தனுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்!

யாழ்ப்பாணம். - நண்பர்கள்.
(சி/2473)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்டத்துக்கு
# 700 ஆசிரியர்கள் நியமனமாவர்

## பிரதிக் கல்விப்பணிப்பாளர் நம்பிக்கை

வவுனியா, மே 14

ஜனாதிபதியின், 25 ஆயிரம் ஆசிரியர்களை உடனடியாக நியமிக்கும் புதிய திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்திற்கு சுமார் 700 ஆசிரியர்கள் நியமிக்கப்படலாம் என்று வவுனியா மாவட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். நவரட்ணராஜா நம்பிக்கை தெரிவித்தார்.

புதிய ஆசிரியர்களின் தெரிவு நியமனம் தொடர்பான வேலைகள் இப்போது கல்வி அமைச்சில் துரிதமாக நடைபெற்று வருவதாகவும் ஜூலை மாதமளவில் தெரிவு செய்யப்படும் புதிய ஆசிரியர்கள் கடமையேற்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப் புதிய திட்டத்தின் கீழ் நாட்டில் பரவலாகக் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறைகள் கணிசமான அளவில் தீர்க்கப்படும் என்று திணைக்கள வட்டாரங்கள் நம்புகின்றன.

இதனிடையில் வவுனியா மாவட்டத்தில் நிலவும் சங்கீத, நடன, விளையாட்டுத்துறை ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு கல்வி அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விபரங்கள், புள்ளி விபரங்களைத் திரட்டும் பணிகளை வவுனியா கல்வித்திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளார்கள். (ஒ-164)

## ஒத்திவைப்பு

தாளையடி, மே 14

பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக் குழுக்களுக்கான தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் புதிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதினாலேயே இத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச-144)

## மதிய உணவு வழங்கும் வேலை வவுனியாவில் துரிதப்படுகிறது

### கல்வித் திணைக்கள உயரதிகாரி கூறுகிறார்

வடக்குகிழக்கு மாகாண சபையிலிருந்து செவ்வாய்க்கிழமை கிடைத்த பணிப்புரையை அடுத்து வவுனியா மாவட்டப் பாடசாலைகளில் மதிய உணவு வழங்கும் திட்ட வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக கல்வித்திணைக்கள உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதற்கான பாடசாலை மட்டத்திலான தயார் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இன்னும் இரண்டு வாரங்களில் மதிய உணவு வழங்குவது ஆரம்பிக்கப்படும்என்றும்அவர் தெரிவித்தார். (க-164)

## மோசமான நிலையில் மருதன்கேணிவீதி

வேலணை, மே 14

பருத்தித்துறை மருதன் கேணி வீதி, வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் பெரிய குன்றும் குழியுமாக இருக்கின்றது. இப் பாதையால் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் கடலில் வள்ளங்கள் போல் தள்ளாடிச் செல்கின்றன. (க-167)

## மட்டுவிலில் மதிய போசனம்

சாவகச்சேரி, மே 14

மட்டுவில் பாடசாலைகளில் மே 2ஆம் திகதி மதிய போசனம் வழங்கல் ஆரம்பிக்கப்பட்டது. மட்டுவில் மகா வித்தியாலயத்தில் சிவஸ்ரீ கி. ஜெகதீஸ்வரக் குருக்கள் டாக்டர் பிலிப்பு ஆகியோர் அதனைத் தொடக்கிவைத்தனர்.

மட்டுவில் தெற்கு அ. மி. த. க. பாடசாலையில் அதிபர் திருமதி இ. சண்முகநாதன் தலைமையில் டாக்டர் பே. பிலிப்பு தொடக்கி வைத்தார்.

மட்டுவில் வடக்கு அ. த. க. பாடசாலையில் கொத்தணி அதிபர் திரு. க. பேரம்பலம் இதனைத் தொடக்கி வைத்தார். அதிபர் திரு. க. அப்புத்துரை இதனை முன்னின்று நடத்தினர். (க - 31)

## இலவசப் பட்டறை

யாழ்ப்பாணம், மே 14

மகவம் - மதி கலைஞர் வட்டம் மாணவருக்கு பல்வேறு துறைகளில் ஆழ்ந்த அறிவை ஊட்டுவதற்கும், களப்பயிற்சி அளிப்பதற்குமாக மாதாந்தம் நோன்மதி நாளில் முற்பகல் 9 - 00 மணி முதல் 2 - மணித்தியால நேரம் இலவசப் பட்டறையை நடத்தவுள்ளது.

மகவம் நடத்தும் பட்டறைத் தொடரின் முதலாவது பயிற்சி எதிர்வரும்21ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை ஊரெழு, மதி அக்கடமி மண்டபத்தில் நடைபெறும். (க)

## விஞ்ஞான உபகரணங்கள் அன்பளிப்பு

மானிப்பாய், மே 14

சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் வித்தியாலயத்துக்கு மானிப்பாய் லயன்ஸ் கழகத்தினரின் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் பல ஆயிரம் ரூபா பெறுமதியான விஞ்ஞான உபகரணங்கள், நீர் இறைக்கும் இயந்திரம் ஆகியன இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

இதற்காக இப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் லயன்ஸ் கழகத்திற்கும், அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்துக்கும் நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளனர். (ச-90)

## கால் நடைகளுக்கு தண்ணீர் இல்லை


அச்சுவேலி, மே 14

அச்சுவேலி வயல் வெளியில் உள்ள சிறு குளங்கள் தோண்டப்படாமல் தூர்ந்த நிலையில் உள்ளதால் கால் நடைகள் கோடை காலத்தில் நீர் குடிக்க முடியாமல் அலைகின்றன.


கடந்தகாலங்களில் இந்த சிறுகுளங்கள் உள்ளூராட்சிப் பகுதியினாலும்சமநல சேவைத் திணைக்களத்தினாலும் வருடந்தோறும் சேறு தோண்டப்பட்டு சுத்திகரிக்கப்படுவது வழக்கம்.


ஆனால் அண்மைக் காலத்தில் பல வருடங்களாக எது விதமான பராமரிப்பும் இன்றி அவை சேறு நிறைந்த நிலையில் காணப்படுகின்றன. (க-11)



# "டினெஸ்ரி" போல், பரம்பரைச் சிறப்புடையது சிங்கர்!



குறுகிய சில வருடங்களில், உள்ளூர்ச் சந்தையில், சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகள் உன்னத அபிமானத்தைப் பெற்று விட்டன. காரணம்? தரத்தில் சிங்கரின் பரம்பரைச் சிறப்புத் தான்! காலம் காலமாக, சிங்கர் பேணியும் வளர்த்தும் வரும் தரச் சிறப்பு. தொழில் நுட்பத்திலும் உறுப்புகளின் நேர்த்தியிலும் விற்பனைக்குப் - பின் -








சேவை ஒழுங்கிலும் நாடு முழுவதும் பரந்து புகழ் பெற்ற சிங்கரின் தரச் சிறப்பு. இலங்கையில், விற்பனைச் சந்தையில் பெரும் பங்கு நிலையைப் பெற்று விட்ட சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகளின் ஆயிர மாயிரம் சொந்தக்காரர்களுடைய நம்பிக்கையை வெற்றி கொண்டதும் அவற்றின் தரச் சிறப்புத் தான். தராதரச் சிறப்புப் போலவே, சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகளின் விற்பனைச் சந்தைப் பங்கு நிலையும் வேகமாய் வளருகிறது.

கிடைக்கும் ரகங்கள் -
12'' மற்றும் 14'' கறுப்பு/வெள்ளை; 14'' வர்ணம் (ஸ்டீரியோ) மற்றும் (மொனிட்டர்); 16'' வர்ணம்; 20'' வர்ணம், விலை, குறைந்தது ரூ. 4,390/- முதல்.

# சிங்கர் தொலைக்காட்சி

உந்து சக்தி பற்பல உடையது; முந்து சக்தி எதுவுமே கிடையாது.

சிங்கர்*
மாசற்ற மேன்மை

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
[1968. 04. 25]
✶
ஆண்டவன் அடியில்
1989. 04. 14

**செல்வன் க பதிப்பிள்ளை திருநாவுக்கரசு**
(உரிமையாளர்: முருகன் ஸ்ரோர்ஸ், கரம்பன்)


பிறப்புண்டேல் இறப்புமுண்டு - இது
இயற்கையின் நியதி - என்றாலும்
விளையும் பயிரை முளையில் கிள்ளி - சென்ற
விதியவனே எம் நிலை உனக்கு விளங்கவில்லையோ?
இதற்கு இறைவன் தீர்ப்பளியானோ
உங்கள் ஆன்ம ஈடேற்றத்துக்காய்
எம் மனம் கனிந்த அஞ்சலிகள் உரித்தாகட்டும்.

14 - 05 - 1989 ஆம் திகதி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளில் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால துயருறும்:
குடும்பத்தினர்.

மடத்துவெளி,
புங்குடுதீவு - 7
(466)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அல்பேர்ட்**
மறைவு: 14 - 04 - 1989
தாயக மண்ணிற்காய்
தன்னுயிர் ஈந்த
மண்ணின் மைந்தனுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்

யாழ்ப்பாணம் — நண்பர்கள்
[சி-2474]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**சுபாஷ்**
மறைவு: 14 - 04 - 1989
தாயக மண்ணிற்காய்
தன்னுயிர் ஈந்த
மண்ணின் மைந்தனுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்

யாழ்ப்பாணம். — நண்பர்கள்
[சி-2475]

## இறுதிப் போட்டி இன்று

குருநகர், மே 14

குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்று வருகின்ற கரப்பந்தாட்ட வலைப்பந்தாட்ட மென்பந்தாட்டகிரிக்கெட்) இறுதிப்போட்டிகள் இன்று 14 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

கரப்பந்தாட்டம் குருநகர் கலையரங்கு முன்பாகவும் வலைப்பந்தாட்டம் புனித யாகப்பர் ஆலய முன்றலிலும் மென்பந்தாட்டம்விளையாட்டு மைதானத்திலும் நடைபெறும்.

பெண்களுக்கான வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் வைக்கிங்ஸ் அணியை மலியன்ஸ் ஏ அணி எதிர்த்து விளையாடும். கரப்பந்தாட்ட இறுதிப் போட்டிக்கு பாடும் மீன் பி அணியும் சென். அன்ரனீஸ் அணியும் தெரிவாகி உள்ளன. மென்பந்தாட்ட இறுதிப் போட்டிக்கு தெரிவாகும் இரு அணியும் அன்றைய தினம் கலந்து கொள்ளும். (க-51)

## உதைபந்தாட்ட தெரிவுக் கோஷ்டி

யாழ்ப்பாணம், மே 14

ஸ்ரீ லங்கா உதைபந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்படவிருக்கும் லீக்குகளுக்கிடையிலான மாவட்டப் போட்டிகளில் பங்குபற்றும் தெரிவுக் கோஷ்டியை உருவாக்க சகல விளையாட்டுக் கழகங்களில் இருந்தும் வீரர்களை இம்மாம் 15ஆம், 16ஆம் திகதிகளில் மாலை 4. 30 மணிக்கு சென். அன்ரனீஸ் வி. க. மைதானத்துக்கு அனுப்பும்படி கோரப்பட்டுள்ளது. (க-3)

## பாடசாலைகள் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15, 17 வயதுகளுக்கு உட்பட்ட அணிகளுக்கிடையே கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடத்த யாழ் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் அடிப்படையில் 1 - 1 - 1974 ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்தோர் 15 வயதுக்கு உட்பட்டோர் பிரிவிலும், 1 - 1 - 1972 ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்தோர் 17 வயதுப் பிரிவிலும் ஆடத் தகுதியுடையவர்களாகக் கணிக்கப்படுவர்.

பாடசாலைகளின் எந்தெந்த அணிகள் இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குகொள்கின்றன என்பதை எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் தமக்கு அறிவிக்கவேண்டும் என மேற்படி கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் கப்டன் என். சோமசுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி அணிகள் எந்த அணியுடன் மோதவேண்டும் என்பதை நிர்ணயிப்பதற்கான குலுக்கல் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை மாலை 2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிறிஸ்தவக் கல்லூரியின் விளை. போட்டி

கோப்பாய், மே 14

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் கல்லூரி அதிபர் பூ. க. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

செல்லையா இல்லம் முதலாம் இடத்தையும் பெற்றது. சண்முகநாதன் ஆகிய இல்லங்கள் முறையே 2ஆம் 3 ஆம் இடத்தையும் பெற்றன.

## திருப்பலி ஒப்பு கொடுத்தல்

குருநகர், மே 14

குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்கில்12 ஆண்டுகள் சேவையாற்றிய அருட்திரு பொமிக் கோல் அடிகள் போலந்தில் இறைவனடி சேர்ந்தமை குறித்து யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

## 15ஆம் நாள் நினைவஞ்சலி



**இராசதுரை ஜெககுமார் ராஜன் (ஜெகன்)**

| மலர்ந்தது | மறைந்தது |
|---|---|
| 29-07-1962 | 30-04-1989 |

மண்ணை மீட்கும் பணியை உன்
தலையிலே சுமந்த ஜெகனே!
உன்சாவை கழுத்திலே கட்டி
இலட்சியத்துக்காய் உழைத்த
எங்கள் ராஜனே!
முடிவுவராத நிலையிலே சொந்தப்
பூமித்தாய் உன்னை அணைத்து
விட்டாளடா தம்பி!

பெற்றோர்கள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.
மைத்துனர்மார். நண்பர்கள்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(10905)

## 31 ஆம் நாள் அஞ்சலியும் நன்றி நவிலலும்



**சுப்பிரமணியம் தர்மலிங்கம்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14-10-1921 | 14-04 1989 |

பிறப்பு - வேலணை, பள்ளம்புலம்
வாழ்வு - கொட்டடி, யாழ்ப்பாணம்

சென்ற 14-04-1989 இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிரியை 14-05-1989 ஞாயிற்றுக்கிழமை பகல் 12-00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இதில் பங்குகொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் யாவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

மேலும் பலவகைகளிலும் எமக்கு உதவிகள் புரிந்தவர்களுக்கும் ஆறுதல் கூறியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்.

32/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(10909)

## கரவெட்டியில் கோமாரி தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே 14

கரவெட்டி - நெல்லியடிப் பகுதிக் கால்நடைகளுக்கு கோமாரி மற்றும் கால்வாய் நோய்த் தடுப்பூசி நாளை 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கன்பொல்லை சீ.ஆர். அலோசியஸ் சமாதான நீதவான் இல்லத்தில் இலவசமாகப் போடப்படும்

பருத்தித்துறை கால்நடை வைத்திய கலாநிதி புனிதம் தங்கராசா இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (க)

## "SPOKEN ENGLISH"

குறுகிய காலத்தில் தமிழ் மூலம் ஆங்கிலம் பயின்று பேசுவதற்கு உதவும் நூலாக வெளிவந்துள்ளது.
து. கவிலங்காவின் "SPOKEN ENGLISH"
விலை: 35/-
தமிழில் உச்சரிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
வியாபாரிகளுக்கு கழிவு உண்டு.
கிடைக்குமிடம்:
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல- 4, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.
(489)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**செல்வன் ச. தயாபரன் (தயா)**

குழந்தை உள்ளம் கொண்ட தயாவே! உங்கள் நினைவலைகள் என்றும் எம்மை விட்டகலா!
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
— சிங்கம்ஸ் பார்மஸி.

மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
(10916)

## FIRST DEATH ANNIVERSARY



BORN:
16 - 10 - 1904
● ● ●
DIED:
14 - 05 - 1988

**Gnanammah Seemampillai**

Flowers We'll strew upon your grave
And Candles we will Light
And for a Mother true and brave
Our Prayers we will recite

Sadly Missed by your Children,
in - laws, grand Children and,
great Grand-child.

60, Temple Road,
Jaffna.
(10914)

## 60 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



**பிரேமதாஷ் (பிரதாப்)**

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 19 - 01 - 1971 | 14 - 03 - 1989 |

தாயக மண்ணிற்காய்
தன்னுயிர் ஈந்த
மண்ணின் மைந்தனுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்

யாழ்ப்பாணம். — நண்பர்கள்
[சி-2476]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
முகடியால் மூடப்பட்டார்.

**பொருள்:**

சூது என்று சொல்லப்படும் மூதேவியால் விழுங்கப்பட்டவர், வயிறு நிறைய உணவும் உண்ணாதவராகிப் பல துன்பப்பட்டு வருந்துவர்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073

14 - 05 - 1989 த: பெ. இல: 23

# பிரேமாவின் பெருந்தன்மை

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் திரு. ரோகண விஜேவீரா நோய்வாய்ப்பட்டுள்ளார். அவருக்குக் கண்டுள்ள இருதய நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்கு அவரை வெளிநாட்டுக்குக் கூட்டிச் செல்ல அவரது சகாக்கள் விரும்புகின்றனர். தமது தலைவரின் நோயைக் குணப்படுத்திவிடவேண்டும் என்பது அவர்களின் விருப்பம்.

நாட்டின் தேசிய அரசியல் நீரோட்டத்தில் இருந்து ஒதுங்கி, மறைந்து வாழும் நிலையில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த எவரும் சாதாரண பிரசைகள் போலத் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது சட்டத்தின் பிரகாரம் அவர்கள் தேடப்படும் நபர்கள். சட்டத்தின் முன்னால் சந்தேகத்துக்கு உரியவர்கள் என்றமுத்திரையுடன் கைது செய்யப்படக் கூடியவர்கள்.

அதன் காரணமாக ம. வி. முன்னணியின் தலைவர் வெளிநாடு செல்வது என்பது சாதாரண விடயமல்ல. ஒன்றில் அவர் சட்டவிரோதமாக, கள்ளத்தனமாக நாட்டை விட்டுச் செல்ல வேண்டும். இல்லையேல் அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுச்செல்ல வேண்டும்.

திரு. விஜேவீராவும், அவரது சகாக்களும் இரண்டாவது மார்க்கத்தையே — அதாவது அரசிடம் அனுமதி பெற்று வெளிநாடு செல்வதையே — தெரிந்து எடுத்திருக்கிறார்கள்.

அவர்களின் அந்த விருப்பம் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அவரும் தாராள மனத்துடன், நல்லெண்ணத்துடன் திரு. விஜேவீரா வெளிநாடு செல்வதற்கு முழுப்பாதுகாப்பும், வசதிகளும் செய்து கொடுக்குமாறு உடனடியாகவே உத்தரவிட்டார்.

நாட்டில் அமைதியை ஏற்படுத்தும் எண்ணத்துடன் திரு. பிரேமதாச, மக்கள் விடுதலை முன்னணியினரைச் சமாதானப் பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தவர். ஆனால் முன்னணியினரோ, அதுபற்றி அக்கறை காட்டாது, தங்கள் வன்செயல் தத்துவத்தையே இறுகப் பிடித்துக் கொண்டு, தொடர்ந்து நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவித்து வந்தவர்கள்.

அவர்களின் இந்தப் போக்கினால், பிரதமர் திரு. ஆர். பிரேமதாச ஆத்திரம் அடையவில்லை; வஞ்சம் தீர்க்க நினைக்கவில்லை; பழிவாங்க எண்ணவில்லை. இதனை அவரது உடனடி உத்தரவு எடுத்துப் புலப்படுத்துகிறது.

எதிரியை பலாத்காரத்தால், வன்செயலால், வெல்வதைவிட, அன்பினால், நல்லெண்ணத்தினால் வெல்வதே நிலையான வெற்றி, நிரந்தரமான வெற்றி என்று மகான்கள். ஞானிகள் காட்டினர். அந்த நெறியை, திரு. விஜேவீரா விடயத்தில் ஜனாதிபதி கடைப்பிடித்திருக்கிறார்.

சித்தாந்தங்களையும், தத்துவங்களையும் வாயால் பேசியும், கையால் எழுதியும் அவற்றை ஒப்பேற்ற முடியாது. எழுதுவதையும் சொல்வதையும் செயலில் காட்டினாலே தத்துவங்களின் நல்விளைவுகளை அனுபவிக்க முடியும்.

அரசியல் தலைவர்கள் பலரும் வெறும் பேச்சு வீரர்களாகவும், பேசுவதற்கு எதிரானதையே செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். அதனாலேயே பல நாட்டு அரசியலிலும் குழப்பங்களும், சச்சரவுகளும் நிலவுகின்றன.

விஜேவீரா விடயத்தில் ஜனாதிபதி நடந்துகொண்ட விதம், அரசியல் உள்நோக்கம் உடையது என்று விமர்சிக்கவும் இடம் உண்டு. எனினும் தனது அரசியல் எதிரியும் ஒரு மனிதன்! அவனை அழிப்பதைவிட, அவனது உயிரைக் காப்பாற்றி, சமாதானப் பேச்சு நடத்தி நாட்டில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணக் கருவே திரு. பிரேமதாசவிடம் இருந்திருக்கிறது என்பதை எவரும் ஒப்புக்கொள்வர்.

சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஒரு நிபந்தனையாகக் கூட திரு. விஜேவீராவுக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்க அரசு விரும்பவில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரின் உயிரை, பேச்சுவார்த்தைக்கு நிபந்தனையாகவோ அல்லது பணயமாகவோ வைக்க அரசு விரும்பவில்லை என்ற அறிவிப்பே அதுவாகும்.

இது அரசினது, அரசின் தலைவரான பிரேமதாசவினது பெருந்தன்மையை, மனிதாபிமானத்தை, நல்லெண்ணத்தை, எடுத்துக் காட்டுகிறது என்று கொள்ளலாம் அல்லவா?

நாட்டின் ஏனைய பிரதான பிரச்சினைகள், விவகாரங்களிலும் அரசு இவ்வாறு பெருந்தன்மையுடன் நடந்து கொண்டால், நாட்டில் அமைதியும் சுபீட்சமும் இயல்பாகவே உதிக்கும். மக்கள் நிம்மதி வாழ்வு காண முடியும்.

## பிரதேசசபை மூன்றாண்டுத் திட்டம்

ஊர்காவற்றுறை, மே 14

யாழ். மாவட்ட பிரதேச சபைகள் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைகள் தொடர்பான மூன்றாண்டுத் திட்டத்தைத் தயாரிக்கும்படி யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். திவகலாலா அறிவித்தலை அனுப்பியுள்ளார்.

பிரதேச சபைகள் ஒவ்வொன்றும் எதிர்வரும் 3 ஆண்டுகளில் அவசியம் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் எனவும் மின்சாரம், வீதி திருத்தம், பொதுசன நூலகம் புதிய வீதி அமைத்தல், வீடமைப்பு, நீர்வளங்கள், பொதுச் சந்தை ஆகியன தொடர்பான மதிப்பீடுகள், வரைபடங்கள் ஆகியவற்றை உடனடியாகத் தயாரிக்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (க-16)

### புனித சூசையப்பர் திருநாள்

பச்சிலைப்பள்ளி, மே 14

இந்திராபுரம் புனித சூசையப்பர் தேவாலயத்தில் மே 2ஆம் திகதி புனித சூசையப்பர் திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

# சோவியத் பற்றி புதிய கொள்கை

# அமெரிக்க அதிபர் வெளியிட்டார்

## இரும்புத்திரையை முற்றாக நீக்கும்படி புஷ் சவால்!

வாஷிங்டன், மே 13

பதவிக்கு வந்த பின்னர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேற்று சோவியத் யூனியன் சம்பந்தமான புதிய கொள்கையை வெளியிட்டார்.

சோவியத் சம்பந்தமான கொள்கையில் பெரியமாற்றங்களை திரு. புஷ் தனது பேச்சில் வெளியிட்டார்.

அவர் சொன்னதாவது; சோவியத்யூனியன் மேற்கொண்டு வரும் அரசியல் சீர்திருத்தத்தை அமெரிக்கா மனப்பூர்வமாக வரவேற்கிறது.

சோவியத் யூனியனில் உள்ள இரும்புத்திரை முறையை முற்றாக அகற்றுவதையே அமெரிக்கா சவாலாக எடுத்துள்ளது.

சோவியத்தை உலக நாடுகளில் இருந்து ஒதுக்கி வைப்பதல்ல அமெரிக்காவின் லட்சியம். உலகநாடுகள் சமூகத்தின் ஓர் அங்கமாக சோவியத்தை மாற்றுவதே எமது லட்சியம்.

ஜனநாயகத்தை நோக்கி சோவியத்யூனியன் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் அமெரிக்காவும் ஈடுகொடுத்து உதவும்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள சோவியத்படைகளை கணிசமான அளவு குறைக்க ரஷ்யா முன்வர வேண்டும்.

பேர்லின் சுவரை தொடர்ந்து வைத்து இருக்கவேண்டும் என்ற தத்துவத்தை ரஷ்யா கைவிடவேண்டும்.

மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு சுய நிர்ணய உரிமையை ரஷ்யா வழங்க வேண்டும்.

ரஷ்யாவில் இருந்து யூதர்கள் வெளியேறும் வசதிகளை இலகுவாக்க வேண்டும்.

ஆயுதம் இல்லாத விமானங்கள் இருநாடுகள் மீது பறப்பதற்கு உள்ள தடையை நீக்கவேண்டும்—

இப்படி அதிபர் புஷ் தனது பேச்சில் வெளியிட்டார். (எ)

### மார்ச் 25 இல் நடந்த

## சட்டசபை அமளிதுமளி படங்களை வெளியிட சபாநாயகர் அனுமதி

சென்னை, மே 13

தமிழ்நாடு சட்டசபையில் கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி நடந்த அமளிதுமளிச் சம்பவங்களை பத்திரிகையாளர் படம் பிடித்தனர்; தூரதர்ஷனும் படம் பிடித்தது

ஆனால் அப்படங்கள் பத்திரிகைகளில் வெளியிடக்கூடாது; தூரதர்ஷனிலும் காட்டக் கூடாது என்று தமிழக சட்ட சபை சபாநாயகர் தமிழ்க் குடிமகன் உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவை ரத்துச் செய்யும்படி எதிர்க்கட்சிகள் கோரிவந்தன.

அப்படங்களை பத்திரிகைகளில் வெளியிடவும் தூரதர்ஷனில் காட்டவும் நேற்று சபாநாயகர் அனுமதி வழங்கினார்.

அந்த அமளிதுமளியின் போது ஜெயலலிதாவின் துகில் உரியப்பட்டதாகவும் முதலமைச்சர் கருணாநிதியின் மூக்குக் கண்ணாடி நொருக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (எ)

## கலைஞருக்கு கறுப்புக் கொடி காட்ட ராஜேந்தர் தயார்

சென்னை, மே 13

முதல்வர் கருணாநிதியை எதிர்த்து தமிழ் சினிமா உலகத்தினர் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும்'', என்று தயாரிப்பாளரும், டைரக்டருமான டி.ராஜேந்தர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ராஜேந்தர் சென்னையில் நிருபர்களிடம் கூறியதாவது:

பூம்புகார் புரொடக்ஷன்சில் நடிகர் ரஜினிகாந்த் போன்ற பெரிய நடிகர்கள் கால்ஷீட் கொடுக்க முன் வரவில்லை; கலைஞரிடம் அடிமை சாசனம் எழுதித்தர முன்வரவில்லை; அ.தி.மு.க ஆட்சியில் சத்தியா மூவீசில் நடித்த ரஜினி, தனது ஆட்சியில் தனது கம்பெனியில் நடிக்க வரவில்லையே என்று முதல்வர் ஆத்திரப் படுகிறார்.

சினிமாவுக்கு வரிச் சலுகை எதையும் அறிவிக்காத கருணாநிதிக்கு சினிமா உலகத்தினர் கறுப்புக்கொடி காட்ட வேண்டும். ஆர்ப்பாட்டம் நடத்தினால் அதில் நானும் கலந்து கொள்வேன்.

இவ்வாறு டி. ராஜேந்தர் கூறினார்

## தங்கக் கடத்தல் முறியடிப்பு

பம்பாய், மே 13

12 கிலோகிராம் தங்கத்தை பம்பாய் சுங்கத் தடுப்பு அதிகாரிகள் கைப்பற்றினர்.

டுபாயில் இருந்து வந்த விமானத்தில் ஒரு கோடி ரூபா பெறுமதியான இத்தங்கம் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது. (எ)

# விபத்தில் வந்த தி.மு.க அரசு விபத்திலேயே கவிழும்

## திருநாவுக்கரசு ஆரூடம்

ஆற்காடு, மே 13

'விபத்தில் வந்த ஆட்சி விபத்திலேயே கவிழும்' என்று சட்டசபை எதிர்க்கட்சித் துணைத்தலைவர் திருநாவுக்கரசு கூறினார்.

ஆற்காடு அருகில் உள்ள விளாப்பாக்கத்தில் அ. தி. மு. க. சார்பில், தி. மு. க. அரசைக் கண்டித்து கண்டனப் பொது கூட்டமும் நடைபெற்றது.

நகர அவைத் தலைவர் கண்ணன் தலைமை தாங்கினார்.

தி. மு. க. எம் எல். ஏக்கள் 6 கோடி மக்களின் ஓட்டு வாங்கி உலகத் தமிழரின் ஆதரவுடன் ஆட்சி நடத்துவதாக கூறுகின்றார்கள்.

13 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த கருணாநிதி பக்குவப்பட்டிருப்பார் என்று எதிர்பார்த்தோம்.

அவரே அதை நான் காயாக இருந்தேன் ஆனால் இப்போது கனியாக மாறி இருக்கிறேன் என்று கூறி இருக்கிறார்.

ஆனால் அழுகிப்போன கனியாக மாறி இருக்கிறார். அதைத்தான் சட்ட சபையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

தமிழகத்தில் தி. மு. க. ஆட்சி நீண்ட நாட்கள் இருக்காது, விபத்திலேயே வந்த ஆட்சி விபத்திலேயே போகும்.

கடந்த 1980ஆம் ஆண்டு பார்லிமென்ட் தேர்தலுக்குப் பின்னர் கருணாநிதி டில்லிக்கு சென்று அப்போதைய பிரதமர் இந்திராவிடம் 'என்னை தமிழக முதல்வர் என்று அறிவித்தால் நான் ஆட்சிக்கு வருவேன்', என்று கூறி எம். ஜி. ஆர் ஆட்சியைக் கலைத்தார். தி. மு. க. வுடன் காங்கிரஸ் சேர்ந்து போட்டியிட்டால் அது ராஜதந்திரம் காங்கிரஸுடன் நாம் சேர்ந்து போட்டியிட்டால் அது சதி,

இவ்வாறு திருநாவுக்கரசு பேசினார்.

## பர்மாவில் பாடசாலைகள் ஜூனில் மீண்டும் ஆரம்பம்

ரங்கூன், மே 13

பர்மாவில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் மூடப்பட்ட பாடசாலைகள் வருகிறமாதம் மீண்டும் திறக்கப்படவுள்ளது.

பர்மா இராணுவத் தலைவர்கள் இதனை அறிவித்தனர்

வருகிற ஜூன் நடுப்பகுதியில் மீண்டும் பாடசாலைகள் திறக்கப்படும்,போது.

அரசு எதிர்ப்புச் சக்திகள் மாணவர்களை அரசு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும்படி தூண்டக் கூடும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக உரிமைகள் கோரி மாணவர்கள் கடந்த ஆண்டு ஆகஸ்டில் அரசு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதைத் தொடர்ந்து இராணுவஅரசுபாடசாலைகளை மூடிவிட்டது தெரிந்ததே. (எ)

## கோர்பச்சேவின் சீன விஜயம்

பீகிங், மே 13

30 ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக சோவியத் தலைவர் ஒருவர் நாளை திங்கட்கிழமை சீனா செல்கிறார்.

இந்தப் பெருமை திரு. மிக்கேய்ல்கோர்பச்சேவுக்குக் கிடைக்கிறது.

இதனிடையில் பீகிங் வரும் கோர்பச்சேவுடன் பேச்சுக்கள் நடத்த சீன பல்கலைக்கழக மாணவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

இதற்கு அனுமதி கோரும் மகஜர் ஒன்றை மாணவர்கள் தயாரித்து வருகின்றனர். [எ]

# புலிகளுடனான பேச்சு விவரம்

# மாகாண அரசுக்கும் அறிவிப்பு

## அமைச்சர் ரஞ்சன் கூறுகிறார்

கொழும்பு, மே 14

இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடத்தும் பேச்சுக்களின் விவரங்கள் எதிர்க்கட்சிகள், வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சரவை, இந்திய அரசு ஆகியவற்றுக்கு அறிவிக்கப்படும்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின இத்தகவலை வெளியிட்டார்.

'எம்மிடம் மறைப்பதற்கு ஒன்றுமே இல்லை. அனைவரும் நம்பிக்கைக்குரியவர்களாக நடப்போம்' — என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பேச்சுக்களின் சாராம்சம் எதிர்க்கட்சிகளுடன்தொடர்பு கொள்ள நியமிக்கப்பட்டிருக்கும் நான்கு அமைச்சர்கள் மூலம் அக்கட்சிகளுக்கு வழங்கப்படும்.

முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் இன்று [புதன்] காலை என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார், பேச்சுக்கள் பற்றி அவருக்குத் தெரிவிக்கப்படும் என்று நான் சொன்னேன் என்று அமைச்சர் ரஞ்சன் மேலும் சொன்னார். (ஒ-எ)

## மெமோரியலில் தமிழ் தின விழா

யாழ்ப்பாணம், மே 14

மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலையின் தமிழ்தின விழா நாளை திங்கள் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக்கல்வி அதிகாரி திரு. இ. கே. குலசேகரம் கலந்து கொள்வார்.

பேச்சுப்போட்டிகள் இசை, நடன நாடகப் போட்டிகளும் இடம் பெறுகின்றன. (ச)

## கௌரிமணாளா! உன்பதம் அரணென்று தேடிவந்தேன்!!

ராகம்: ரஞ்சனி தாளம்: ஆதி

**பல்லவி**

காப்பதுன் கடனையா கௌரிமணாளா — இன்னும்
காத்திட யார்தான் உள்ளார்? — என்னைக்
[காப்... ]

**அனுபல்லவி**

உன்பதம் சரணென்று ஓடிவந்தேன் — மின்னும்
உன்பதம் அரணென்று தேடிவந்தேன் — ஐயா!
[காப்......]

**சரணம்**

அன்புன்தன் வடிவமென்பார் பொய்யாமோ — மெய்
அன்புக்கும் அடிமையென்பார் பொய்யாமோ — நீ
அன்புள்ளத் திருப்பதெல்லாம் பொய்யாமோ — உன்
அன்பர்கள் சொல்வதெல்லாம் பொய்யாமோ — என்றும்
[காப்......]

(முருகு)

[இன்று 14-05-89 திருக்கேதீச்சரம் 4-ம் திருவிழா]

### கர்ப்பிணித் தாய்மாருக்கும்

## சத்துணவு வழங்க வேண்டும்

### மாவட்ட சுகாதார கல்வி அதிகாரி பேச்சு

மண்டைதீவு, மே 14

''இரத்த சோகையுடைய கர்ப்பிணிகளுக்கு ஆரோக்கியமான குழந்தைகள் பிறக்க முடியாது. ஆகவே கர்ப்பம் அடைந்த தாய்மார்களுக்கு சத்துள்ள உணவுகளை வழங்குவதோடு அவர்களின் உடல் வளர்ச்சியிலும் அக்கறை காட்ட வேண்டும்''

மண்டைதீவு அரசினர் பொதுவைத்தியசாலையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய யாழ் மாவட்ட சுகாதார கல்வி அதிகாரி திரு. வைத்தீஸ்வரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மண்டைதீவு அரசினர் பொதுவைத்தியசாலை அதிகாரி திரு. பொ. பரமநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் இப் பகுதியை சேர்ந்த இளம் யுவதிகள் தாய்மார்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

வேலணை கிழக்கு வெளிக்கள மருத்துவமாது செல்விக. வாலாம்பிகை பேசுகையில்வறுமை ஒழிப்புத்திட்டத்துக்கும் சுகாதாரத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது வறுமையிலுள்ள குடும்பங்கள் மத்தியில் சுகாதாரசீர்கேடுகளையும் காணமுடிகின்றது. வறுமையை ஒழித்துக்கட்டினால் மக்கள் சுகாதாரத்தை கடைப்பிடிக்க முடியும். பயிற்சி பெற்ற ஆரம்பசுகாதாரபெண் தொண்டர்கள் வீடு வீடாக சென்று இப் பகுதி மக்களுக்கு சுகாதார அறிவை கற்பிக்க வேண்டும். அறியாமையால் அனேக நோய்கள் எம்மை பிடித்துக் கொள்கின்றன என்றார். (க-88)

## அதிகரித்த விலையில் பாண்

சுன்னாகம், மே 14

யாழ் குடாநாட்டில் கோதுமை மாவிற்குத் தட்டுப் தட்டுப்பாட்டு நிலை ஏற்பட்டிருக்கும் போது போக்குவரத்துச் செலவைக் காரணங் காட்டி பாணின் விலை அதிகரிக்கப்பட்டது.

அந்த அதிகரித்த விலையிலேயே தற்போதும் பாண் விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிர்ணயிக்கப்பட்ட நிறையிலும் இப்போது பாண் தயாரிக்கப்படுவதில்லையாம்.

விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களமும் இந்த விடயத்தில் பாராமுகமாக இருப்பதாகவும் குறை தெரிவிக்கப்படுகிறது.

பாண் ஒரு இறாத்தல் மூன்றேகால் ரூபா தொடக்கம் மூன்றரை ரூபாவரைவிற்பனையாவதாகவும், நிறையும் 300 கிறாமிற்கு முன்பின்னாக இருப்பதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது. (ச-27)

## சாராய வியாபாரிக்கு கிடைத்த புதுவித தண்டனை!

கொழும்பு, மே 14

சட்டவிரோதச் சாராயம் விற்பனையில் ஈடுபட்ட ஒருவருக்கு கொழும்பு மேலதிக மாஜிஸ்ரேட் கே. எச். சுமித்ரபால புதுவிதமான தண்டனை வழங்கினார்.

மூன்று தினங்களுக்கு காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரை நீதிமன்றக் கட்டடத்தை கூட்டுவதே எதிரிக்கு விதிக்கப்பட்ட தண்டனையாகும்.

மே 10, 11, 12 ஆம் திகதி வரை நீதிமன்றத்தை நீதிமன்றப் பதிவாளரின் மேற்பார்வையில் கூட்டிவிட்டு மே 23 இல் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி எதிரிக்கு உத்தரவிடப்பட்டது. (ஒ-எ)

### சமய சந்நிதிகளில்

## நவநாள் திருவிழா

பச்சிலைப்பள்ளி, மே 14

முகமாலை இத்தாவில் புனித பார்ப்பரம்மா தேவாலய வருடாந்த நவநாள் உற்சவம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

13 ஆம் திகதி பிற்பகல் நற்கருணை ஆராதனையும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலி பூசையும், திருச்சொரூப பவனியும் இடம் பெறவுள்ளன.

முகமாலை பங்குத் தந்தை அருட்திரு. பிரான்சிஸ் அடிகளார் நவநாள் ஆராதனைகளை நடத்தி வருகிறார். (க-117)

## முரசுமோட்டை முருகன் ஆலயத்தில்

யாழ்ப்பாணம், மே 14

முரசுமோட்டை ஸ்ரீமுருகன் ஆலய வருடாந்த உற்சவம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

19ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

இந்த உற்சவ காலத்தில் தினமும் இரவு 8 மணிக்கு திரு. வை. நித்தியானந்த சர்மாவினால் கந்தபுராணம் தொடர் விரிவுரை நிகழும். [இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ பட்டுப் பிடைவைகள்
✶ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
**மயூரா சென்ரர்**
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

# உதயன்

14 - 05 - 1989 ஞாயிற்றுக்கிழமை

சேட்டிங் சூட்டிங்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
**மயூரா சென்ரர்**
13 B, நவீன சந்தை, :: யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணம் - கொழும்பு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
இந்த விமானத்தில் ஒவ்வொரு பயணியும் தம்முடன் 15 கிலோ எடையுள்ள பொருள்களையும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### ஆசனப்பதிவு

பலாலி விமான நிலையத்திற்குச் செல்லும் நுழைமுக வாயிலுக்கு முன்பாக விசேடமாக அமைக்கப்பட்டிருக்கும் ''ஹெலி ரூர்ஸ்'' இதற்கான கொட்டகையில் தினமும் காலை 7 மணி முதல் நண்பகல் ஒரு மணி வரை ஆசனப்பதிவுகளைச் செய்து கொள்ள முடியும்.

கொழும்பில் சேர். சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் — நீகல் தியேட்டருக்கு அருகாமையில் உள்ள — இலங்கை விமானப்படை தலைமையகத்தில் அமைந்துள்ள ஹெலி ரூர்ஸ் பணிமனையிலும் ஆசனப் பதிவுகளைச் செய்துகொள்ள முடியும்.

பொதுமக்கள் முதல் நாளே தமது பயணத்திற்குரிய ஆசனப் பதிவுகளைச் செய்து கொண்டால் வீண் சிரமங்களைத் தவிர்க்க முடியும் என சம்பந்தப்பட்ட விமானப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விமான நிலையத்திற்கு வருவதற்கோ அல்லது விமான நிலையத்திலிருந்து வெளியே நகருக்குச் செல்வதற்கோ விசேட வாகன வசதி எவையும் வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவித்த அந்த அதிகாரி —

பலாலியில் மட்டும் விமான நிலைய நுழைவாயிலிலிருந்து விமான நிலையத்திற்கு வருவதற்கோ அல்லது விமான நிலையத்திலிருந்து நுழைவாயில் வரை செல்வதற்கோ விசேட ஜீப் வசதிகளை விமானப்படை செய்து கொடுக்கும் என்றும் சொன்னார்.

விமான நிலையத்திலிருந்து விமானம் வரையும் பயணிகளே தமது பொதிகளைச் சுமந்து செல்ல வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### திருமலை மட்டக்களப்புக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஊடாக கொழும்புக்குத் தினசரி நண்பகலில் மற்றொரு விமான சேவை ஒன்றும் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விமான சேவைகளில் பொதுமக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் —

எஞ்சிய ஆசனங்களை இலங்கை பாதுகாப்புப்படையினர் பயன்படுத்துவர் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற

# நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் 18 இந்தியப் படையினர் உயிரிழப்பு

### பி. பி. சி. இப்படி அறிவிக்கிறது

கொழும்பு, மே 14

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற நிலக் கண்ணிவெடித் தாக்குதல் சம்பவம் ஒன்றில் 18 இந்திய அமைதிப் படை ஜவான்கள் கொல்லப்பட்டனர் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கொழும்பில் தெரிவித்ததாக பி.பி.சி. வானொலி நேற்று இரவு அறிவித்தது.

இந்திய இராணுவ ஜீப் ஒன்றே நிலக்கண்ணியில் சிக்கியதாகவும் பி. பி. சி. செய்தி தெரிவித்தது.

இது பற்றி பி. பி. சி. கொழும்பு செய்தியாளர் கிறிஸ் நட்டால் கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தின் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு விசாரித்தார்.

இத் தாக்குதல் பற்றிய விபரங்கள் தனக்குக் கிடைக்கவில்லை என்று அந்த அதிகாரி பி. பி. சி. செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

இத் தாக்குதலின்போது இந்திய அமைதிப் படையினரின் ஆயுதங்களையும் கைப்பற்றியதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவித்தது.

கடந்த இரண்டு தினங்களாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய அமைதிப்படை தனது நடவடிக்கைகளை விஸ்தரித்து வருவதாகவும் விடுதலைப் புலிகள் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

### திருமலையிலும் தாக்குதல்

இதே வேளை திருமலை துறைமுக இறங்குதுறை ஒன்றுக்கு அருகில் நேற்று முன்தினம் காலையில் நடந்த நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த மேஜர் ஒருவர் உயிரிழந்தார் என்றும் வேறு நால்வர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாயகம் திரும்பிக்கொண்டிருந்த இந்திய அமைதிப் படையினரே இதில் பாதிக்கப்பட்டனர் என்றும் பி.பி.சி. செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஒ- எ

## குருநகர் - பாஷையூர் ....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
படைப்பதற்கும் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

இதே வேளை கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5 மணி அளவில் பாஷையூர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கைகலப்பை அடுத்து நடைபெற்ற இரு பகுதி மோதலிலும் இருபகுதிக்கும் பல்லாயிரம் ரூபா பெறுமதியான நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

வீடுகள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், சோடாப் போத்தல்கள், கார் கண்ணாடிகள் ஓடுகள், அஸ்பெஸ் சீற்றுகள் என்பன சேதமடைந்துள்ளன.

இரு பகுதியிலும் சிலர் காயத்துக்கும் உள்ளாகினர்

சைக்கிள் பார்க்கில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள்களில் 17 சைக்கிள்கள் சேதமாக்கப்பட்ட நிலையில் பாஷையூர் பங்குத் தந்தை பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 2 மோட்டார் சைக்கிள்களும் அங்கே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டு வரும் அப்போதிக் நீஸ் வெற்றுக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணியும் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியும் மோதின.

அப்போது குருநகர்-பாஷையூர் ஆதரவாளர்கள் மத்தியில் ஏற்பட்ட கைகலப்பே தொடர்ந்து மோதலாகி உருவெடுத்து வருகிறது. (இ-51)

## தங்கம் பறிமுதல்

கொழும்பு, மே 14

85 லட்சம் ரூபா பெறுமதியான தங்கப் பாளங்கள் வெள்ளிக்கிழமை இரவு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

சிங்கப்பூரிலிருந்து வந்த விமானத்தில் பயணம் செய்த இரு ஜெர்மனியரிடமும், ஒரு இலங்கையரிடமும் இருந்தே ஒவை மீட்கப்பட்டன.

## இன்றைய கிரிக்கெட்

இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டத்தில் 'ஷப்ரு' விளையாட்டுக் கழக அணியும் வட்டுக்கோட்டை கோல்ட் ஸ்ரார் வளையாட்டுக் கழக அணியும் மோதும்.

மாலை 1.00 மணிக்கு ஆரம்பமாகும் போட்டியில் யாழ். கிறீன் அன்ட் கோல்ட் விளையாட்டுக் கழக அணியும், யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக (சொக்ஸ்) அணியும் மோதுகின்றன.

இப் போட்டிகள் யாவும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது!

## பேச்சு நடத்த...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
தம்மிடம் மேலும் தெரிவித்ததாகவும் திரு. கிறிஸ் நட்டால் கூறினர்.

இதேசமயம் இலங்கை அரசுடன் பேச்சு நடத்துவதற்கு ஜே.வி.பி. இயக்கம் முன்வந்திருப்பதாக வெளிவந்த செய்தியை மறுத்து லண்டனில் உள்ள ஜே.வி.பி. செயலகம் பி. பி. ஸி. நிறுவனத்துக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## கந்தர்மட ..


[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
யோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் விளைவாக பொதுமக்களில் இருவர் காயமடைந்தனர். அவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கந்தையா அரியகுட்டி (வயது 74) கந்தர்மடம், லோகநாதன் தேவ அமிர்தன் (வயது 18) நல்லூர் ஆகிய இருவருமே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்கள் ஆவர்.

துப்பாக்கிச் சூடு காரணமாக நேற்றுச் சில மணி நேரத்துக்கு இப்பாதையூடாக போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் கோவில் வீதி வழியாக சேவையிலீடுபட்டன.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அரியரெட்ணம் சிறிதரன்
(தாடிசிறி)

தாயின்மடியில்: 03 – 01 – 1959
தாயகமண்ணில்: 14 – 04 – 1989

தமிழ்மண் காக்க தன் இனம் ஓங்க
களம் புகுந்த செல்வமே
தாய் நாட்டைக் காக்க வந்த உன்னை
வீரத்தாய் அணைத்தாளோ?
வெற்றித் திலகம் இட்டு வருவாய் என்று
வேட்கை கொள்ள வைத்தாயே
கலங்காத உன்முகம் அழியவில்லை எம்மனத்தைவிட்டு
கருணையிலாக் காவலன்
வீதியிலே கவர்ந்து சென்றான்
உன் உருவம் அழிந்ததேயன்றி மக்கள்
மனதில் இருந்து உன் நினைவு
இன்னுமே அழியவில்லை
அந்த நாளை எண்ணும் போது
நெஞ்சம் வேதனை கொள்கின்றதே!
''இறைவா'' நம் சிறீ என்றும் உன்னடியிருக்க
இவனின் வீர ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உன்பிரிவால் துயருறும்
அன்புத்தாய், பெரியப்பா, சகோதரர், சகோதரிகள்,
அத்தான், மருமக்கள், மச்சான்மார்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

[சி-2568]

# மரண அறிவித்தல்கள்

## திரு. சங்கரப்பிள்ளை சபாபதி

காரைநகர் புதுறோட்டைச் சேர்ந்த இளைப்பாறிய வட்டுக்கோட்டை பகுதி கல்வி அதிகாரி திரு. சங்கரப்பிள்ளை சபாபதி 12.05.89 வெள்ளிக்கிழமையன்று சிவபதம் எய்தினார்.

அன்னார் சிவபாக்கியம் (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக்கணவரும் சிவதாசன், காலஞ்சென்ற முருகேசு, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவசுப்பிரமணியம், கதிரவேற்பிள்ளை, காலஞ்சென்ற தர்மலிங்கம், சோமசுந்தரம், இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சபாநடேசன் B.Sc. (கனடா), சபாநாதன் B. A. (ஜேர்மனி), சுசீலவதி, சபாநேசன் (வீரகேசரி லிமிட்டட்), சபாநாயகம் (பொறியியலாளர் U. K), Dr. சபாரத்தினம் Ph. d [U. K], சிவஞானவதி, சபேந்திரன் B. Sc. (U. K) சங்கரப்பிள்ளை, (Quick Contractors Colombo), ஆகியோரின் அன்புத் தந்தையும், தனலட்சுமி B. Sc. (கனடா), சரஸ்வதி (ஆசிரியை யா/ கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வித்தியாலயம், காரைநகர்), சி.விநாயகமூர்த்தி (Radio Grapher), யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை] சகுந்தலாதேவி. விமலாதேவி (U. K) Dr. மங்கையற்கரசி (U. K) துரைச்சாமி (ஆசிரியர், யா/கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி. காரைநகர்) யசோதா [U. K], சிவமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் ரவிசங்கர் (U. S. A.), பிரசன்னா (கனடா), சுதர்சினி (கனடா), சுபத்திரா, பவானி, சிவகணேஷ், சித்திராங்கனி, ஜெயப்பிரகாஷ், மிருணாலினி, ஸ்கந்தபிரசாத், சிவரூபன், சிவரத்தினம், சிவாஜினி, யசோதினி (U.K.), நிமலன் (U. K.), மீரா (U. K.), ராதா (U. K.), தயானந்தன், சுகந்தினி, ஜெயந்தினி, நந்தினி, சர்வானந்தன், சதீஸன் (U. K.), சங்கரி (U. K.), றுக்ஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் காரைநகர் புதுறோட்டில் உள்ள அவரது இல்லத்தில் 15.05.89 திங்கட்கிழமை காலை நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்திற்கு அன்று காலை 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஆகிய அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
**திருமதி சிவபாக்கியம் சபாபதி.**
புதுறோட்,
காரைநகர். (10915)

## திரு. கணபதிப்பிள்ளை இராசையா

[லிலி அவெனியு, வெள்ளவத்தை – பாணந்துறை முன்னாள் வர்த்தகர்]

காரைநகர் திரு. கணபதிப்பிள்ளை இராசையா காலமாகிவிட்டார்.

இவர் செல்லாச்சியின் அன்புக் கணவரும், கருணாநிதி (வர்த்தகர், மல்லாகம்), கமலாம்பிகை, யோகாம்பிகை (இலங்கை வங்கி, கிளிநொச்சி), மதியழகன் (சிங்கம் கஃபே, யாழ்ப்பாணம்), ராதா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மு. சிவஞானம் (ஆசிரியர், சிவஞானோதய வித்தியாசாலை, காரைநகர்), குணநாயகம் (நீர்ப்பாசன இலாகா, ஒட்டுசுட்டான்), சிவமணி ஆகியோரின் மாமனாரும், க. இளையதம்பியின் (வர்த்தகர், மல்லாகம்) சகோதரருமாவார்.

தகனக்கிரியைகள் சாம்பலோடை மயானத்தில் 13-05-1989 அன்று நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
காரைநகர். [493] **இ. கருணாநிதி**

## திரு. எஸ். இராமலிங்கம்

[தமிழ்ச் சுருக்கெழுத்தின் தந்தை]

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், அராலியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னத்தம்பி இராமலிங்கம் (ஓய்வுபெற்ற தமிழ் சுருக்கெழுத்துத் தட்டெழுத்து விரிவுரையாளர், பல் தொழில் நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம். சம்மாந்துறை, Office Language Department) காலமானார்.

அன்னார் மகாலட்சுமியின் அன்புக் கணவரும், செல்வி ஊர்மிளா இராமலிங்கம் (பரீட்சைக் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), செல்வன் நெடுஞ்செழியன் (ஜேர்மனி), செல்வன் அரவிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 14-05-1989 காலை 11-00 மணியளவில் அராலியில் நடைபெறும். தயவுசெய்து நண்பர்கள், உறவினர்கள், மாணவர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
'கலையகம்', **திரு. நா. சுந்தரலிங்கம்**
அராலி தெற்கு, அராலி. [10926]

# மரண அறிவித்தல்கள்

## திரு. இரத்தினம் சபாரத்தினம்

(உரிமையாளர், பாமா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்)

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திரு. இரத்தினம் சபாரத்தினம் 13-5-89ல் காலமானார். இவர் கொக்குவில் மேற்கு K. K. இரத்தினம் தம்பதிகளின் மூத்த புதல்வரும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சத்தியபாமா (கனடா), சத்தியேந்திரன் (U. K.), சத்தியகலா, சத்தியராணி, சத்தியரூபி [கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவிகள்] ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. மூ. மகேந்திரராசாவின் (கனடா) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (15-5-89) திங்கட்கிழமை நாளை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். தயவு செய்து இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : **இ. சிவலிங்கம் (சகோதரர்)**
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (10925)

## திருமதி நாகமணி சின்னத்தங்கம்

சங்கானை ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஓய்வுபெற்ற கணக்காளர் சி. நாகமணியின் துணைவியார் திருமதி நா. சின்னத்தங்கம் (13 – 5 – 89) சனிக்கிழமை சிவபதமடைந்து விட்டார். இவர் நித்தியானந்தன் (கணக்காளர், லண்டன்), திருமதி நா. புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. நா. நாகலிங்கம் அவர்களின் அன்பு மாமியாரும், செல்விகள் சாரதாதேவி, அஜந்தாதேவி (மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி), சியாமளாதேவி (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேத்தியும், மாவிட்டபுரம் பரமு - பொன்னு தம்பதிகளின் அருமை மகளும், திரு. வயிரமுத்து, திரு. வேலுப்பிள்ளை, திருமதி சின்னத்தம்பி இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-5 89 இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சங்கானை விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**நா. நாகலிங்கம்**
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (10927)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 14—05—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org